Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

FRIDAY, MAY 10, 2024

வெள்ளிக்கிழமை மே 10, 2024 | ஒளி: 09 கதிர் 249 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ | FREE

## விலை குறைந்தது

பெரிய வெங்காயத்தின் விலை குறைந்துள்ளதாக அத்தியாவசியப் பொருட்களின் இறக்குமதியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

ஒரு கிலோ கிராம் பெரிய வெங்காயத்தின் சில்லறை விலை 160 முதல் 200 ரூபாய் வரை குறைந்துள்ளதாகத் தெரிவிக்கும் இறக்குமதியாளர்கள், வெங்காயத்தின் விலை மேலும் குறையும் என நம்புவதாகவும் தெரிவிக்கின்றனர்.

இந்தியாவில் இருந்து வெங்காயம் இறக்குமதி தொடங்கியுள்ளதே வெங்காயத்தின் விலை வீழ்ச்சிக்குக் காரணம் என்றும், எதிர்காலத்தில் வெங்காயத்தின் விலை மேலும் குறையும் என்றும் அத்தியாவசியப் பொருட்களின் இறக்குமதியாளர்கள் தெரிவிக்கின்றனர்.





## ஜனாதிபதி தேர்தலுக்கான திகதி அறிவிப்பு

ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்குப்பதிவு செப்டெம்பர் 17 முதல் ஒக்டோபர் 16 வரை நடைபெறும் என தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

நியமிக்கப்பட்ட நேரத்தில் வேட்புமனுக்கள் கோரப்படும் என்றும் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

அரசியலமைப்பு மற்றும் 1981ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க ஜனாதிபதி தெரிவு விசேட ஏற்பாடுகள் சட்டத்தின் விதிமுறைகளுக்கு உட்பட்டு, குறிப்பிட்ட காலத்திற்குள் வேட்புமனுக்கள் கோரப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

### "நாட்டின் முன்னேற்றத்துக்கு

## பொது உடன்பாடு அவசியம்"



இலங்கையை உலகில் அபிவிருத்தியடைந்த நாடாக விரைவில் உயர்த்த ஒற்றுமை, பொது உடன்பாட்டுடன் முன்னோக்கிச் செல்லவேண்டுமென வலியுறுத்திய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க,. நாட்டுக்கான பொது உடன்பாட்டின் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

நாட்டின் எதிர்கால சந்ததியினருக்குக் கிடைத்திருக்கும் வாய்ப்பை நழுவ விட வேண்டாமெனக் கேட்டுக்கொண்ட ஜனாதிபதி, இந்த இக்கட்டான நேரத்தில் நாட்டை விட்டுத் தனிப்பட்ட இலட்சியங்களைக் கருத்தில் கொண்டு செயல்படுவது மாபெரும் அழிவின் ஆரம்பமாக அமையும் என்றார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (09) விசேட உரை ஆற்றினார். அந்த உரையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இன்று நாம் எவ்வாறு செயல்படுகிறோம் என்பதைப் பொறுத்தே எமது எதிர்காலம் தீர்மானிக்கப்படும் என்று சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அன்று தம்மை நாட்டுக்குத் துரோகம் செய்தவர்களாக முத்திரை குத்திக்கொள்ளப் போகிறார்களா? அல்லது நாட்டின் மீது அன்பு கொண்டவர்கள் என்ற அடையாளத்தைப் பெறப் போகிறார்களா? என்பதைத் தீர்மானிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

(முழு உரையின் சாரம்சம் பக்கம் 07)

## "தேர்தலுக்கு நாங்கள் தயார்"



பாராளுமன்றத்தை நாளையே கலைத்தாலும் தமக்குப் பிரச்சினையில்லை. நாங்கள் பொதுத் தேர்தலுக்கும் தயாராகவே இருக்கின்றோம் என்று ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரட்ன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (09) இடம்பெற்ற கடை, அலுவலக ஊழியர் (ஊழியத்தையும் வேதனத்தையும் ஒழுங்குபடுத்தல்), (திருத்தச்) சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்று கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

தொடர்ச்சி P2

## தனியார் இராணுவத்தை உருவாக்கி தாக்க முயற்சி

### மனோ குற்றச்சாட்டு; தொழிலாளர்களை பாதுகாக்க வலியுறுத்து

தோட்ட முதலாளிகள், இராணுவத்தில் இருந்து ஓய்வுபெற்றவர்களைப் பயன்படுத்தி தனியார் இராணுவத்தை உருவாக்கி தொழிலாளர்கள் மீது தாக்குதல் நடத்தும் செயற்பாடுகளில் ஈடுபடுவதாகக் குற்றஞ்சாட்டிய தமிழ் முற்போக்குக் கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன், இது தொடர்பில் தொழில் அமைச்சு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (09) இடம்பெற்ற கடை, அலுவலக ஊழியர் (ஊழியத்தையும் வேதனத்தையும் ஒழுங்குப்படுத்தல்), (திருத்தச்) சட்டமூலம் மீதான விவாதத்தின் போதே மனோ கணேசன் இதனை தெரிவித்தார்.



தொடர்ச்சி P2

## வியாஸ்காந்துக்கு ஆளுநர் வாழ்த்து




இந்தியன் ப்ரீமியர் லீக் (IPL) கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் சன் ரைசஸ் ஹைதரபாத் அணிக்காக விளையாடியுள்ள யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த துடுப்பாட்ட வீரர் விஜயகாந்த் வியாஸ்காந்திற்கு வடக்கு மாகாணம் சார்பில் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன் என்று பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாணத்திலிருந்து தனது கிரிக்கெட் பயிற்சியைப் பெற்ற இவர் இலங்கைக்குப் பெருமிதத்தைப் பெற்றுக்கொடுத்துள்ளதுடன், யாழ்.மண்ணிற்கும் பெருமை சேர்த்துள்ளார்.

பல்வேறுபட்ட சமூக சீர்கேடான செயற்பாடுகளில் கவனம் செலுத்தும் இளைய தலைமுறையினருக்கு, விளையாட்டின் மூலம் சாதனை படைக்கும் 22 வயதேயான வியாஸ்காந்த் ஒரு சிறந்த முன்னுதாரணமாவர்.

தொடர்ச்சி P2



## 'Back to Law College'

இலங்கை சட்டக் கல்லூரியின் (SLLC) 150 ஆவது ஆண்டு கொண்டாட்டம். 'Back to Law College' எனும் தொனிப்பொருளில் ஜூலை 6ஆம் திகதி நடைபெறவுள்ளது. அதற்கான டிக்கெட்டுகளை வெளியிடும் நிகழ்வு, சட்டக் கல்லூரியில், புதன்கிழமை (08) நடைபெற்றது. ஜனாதிபதி சட்டத்தரணி கலிங்க இந்ததிஸ்ஸவினால் பிரதம நீதியரசர் ஜயந்தசூரியவிடம் முதலாவது டிக்கெட் கையளிக்கப்பட்டது.

## டயானாவுக்கு பறக்கத் தடை

முன்னாள் இராஜாங்க அமைச்சர் டயானா கமகே வெளிநாடு செல்வதற்குத் தடை விதித்து கொழும்பு பிரதான நீதவான் திலின கமகே வியாழக்கிழமை (09) தடை உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இங்கிலாந்து அல்லது இலங்கை இராஜதந்திரி அல்லது வேறு கடவுச்சீட்டைப் பயன்படுத்தி வெளிநாடு செல்வதைத் தடுக்கும் வகையில் பிறப்பிக்கப்பட்ட தடை உத்தரவை குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளருக்கு அனுப்புமாறும் நீதவான் உத்தரவிட்டுள்ளார்.



தொடர்ச்சி P2

## மைத்திரியின் தடை நீடிப்பு

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தவிசாளராக செயற்படுவதைத் தடுக்கும் வகையில் நீதிமன்றத்தினால் பிறப்பிக்கப்பட்ட தடையுத்தரவை எதிர்வரும் 29ஆம் திகதி வரை நீடித்து கொழும்பு பிரதம மாவட்ட நீதிபதி சந்துன் விதான வியாழக்கிழமை(09) உத்தரவிட்டுள்ளார்.

குறித்த பதவிக்கு மைத்திரிபால சிறிசேன, நியமிக்கப்பட்டமை கட்சியின் யாப்பிற்கு முரணாக அமைந்துள்ளதால் அவர் தவிசாளராக செயற்படுவதற்குத் தடை விதித்து உத்தரவிடுமாறு கோரி முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க இந்த மனுவை தாக்கல் செய்திருந்தார்.



தொடர்ச்சி P2

## "பொருளாதாரத்தில் வளர்ச்சி இல்லை"

நாடு இயல்பு நிலைக்குத் திரும்பியுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கூறினாலும், நாட்டின் பொருளாதாரத்தில் வளர்ச்சி ஏற்படவில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (09) ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் விசேட உரையைத் தொடர்ந்து உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு கூறினார்.

ஜனாதிபதி அடிக்கடி இந்த சபையில் கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

அதன்போது அவர் தீப்பிடித்த நாடு மற்றும் நரகத்தை பொறுப்பேற்றதாக கூறியுள்ளார்.



தொடர்ச்சி P2

## பரீட்சார்த்தியை தாக்கிய மாணவர் இருவர் கைது

தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் தோற்றுக்கொண்டிருந்த பரீட்சார்த்தியைதாக்கிய சம்பவம் தொடர்பில் மாணவர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக காலி ரத்கம பொலிஸார் தெரிவித்தனர்.

கம்மத்தகொட மாவட்டம், ரத்கம பிரதேசத்தில் வசிக்கும் 17 மற்றும் 16 வயதுடைய இரு மாணவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சி P2

### ஒன்பது ஆண்டுகளில்

## ரயில்களில் மோதி 103 யானைகள் பலி



2015ஆம் ஆண்டு முதல் 2024ஆம் ஆண்டு தொடக்கம் வரையான 9 ஆண்டுகாலப்பகுதியில் காட்டு யானைகள் 103 ரயில்களில் மோதி உயிரிழந்துள்ளதாக வனஜீவ ராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சர் பவித்ராதேவி வன்னியராச்சி தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (09) இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினா நேரத்தில் போது சமன் பிரிய ஹேரத் எம்.பி. எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும்போதே இதனை குறிப்பிட்டார்.

மேலும், காட்டு யானைகள் ரயில்களில் மோதுவதை தடுப்பதற்கு முறையான பொறிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. இதற்கமைய ரயில்வே திணைக்களம் மற்றும் வனஜீவராசிகள் பாதுகாப்பு அமைச்சு ஒன்றிணைந்து ரயில் பாதைகளில் காட்டு யானைகள் பயணம் செய்யும் இடங்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. இந்த பகுதிகளை விசேட பாதுகாப்பு பகுதிகளாகவும், கண்காணிப்பு பகுதிகளாகவும் அறிவிப்பதற்கு நடவடிக்கைககள் எடுக்கப்பட்டுள்ளன.

அத்துடன், காட்டு யானைகள் கடக்கும் பகுதிகள் குறித்து ரயில் சாரதிகளுக்கு தெளிவுப்படுத்தவும், ரயில் பாதைக வளைவு பகுதிகளை காட்டு யானைகள் கடக்கும் போது அவைகளை முன்கூட்டியதாக அவதானிக்கும் வகையில் விசேட இயந்திரங்கள் பொருத்துவதற்கும், நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார்.

PAGE 1 தொடர்ச்சிகள்

# ஜனாதிபதி தேர்தலுக்கான திகதி அறிவிப்பு



தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல் ரத்னாயக்கவின் கையொப்பத்துடன் இந்த அறிக்கை வெளியாகியுள்ளது.

# “தேர்தலுக்கு நாங்கள் தயார்”

அதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில், ஐக்கிய மக்கள் சக்தியின் சட்டப்பூர்வ தன்மை தொடர்பில் அமைச்சர் கஞ்சன விஜேசேகர குறிப்பிட்டிருந்தார். அவருக்குப் பதிலளிக்க வேண்டியுள்ளது. அதாவது, இந்தக் கட்சியை மங்கள சமரவீரவே பதிவு செய்தார். 2020 பெப்ரவரி மாதம் முதல் ஐக்கிய மக்கள் சக்தி செயலாளராக ரஞ்சித் மத்தும பண்டாரவே பதவி வகிக்கின்றார்.



அதன்போது நடந்த தற்போதைய பாராளுமன்றத்தின் தேர்தலுக்கான வேட்பு மனுவானது ரஞ்சித் மத்தும பண்டாரவினாலேயே கையெழுத்திடப்பட்டது. அப்போது ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பு மனுவை இரத்துச் செய்யுமாறு ரணிலின் ஆலோசனைக்கமைய உயர்நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்யப்பட்டது. எனினும் நீதிமன்றம் அந்த மனுவை நிராகரித்து, தமது வேட்பு மனுவை சட்டப்பூர்வமானதாக ஏற்றுக்கொண்டுள்ளது.

இதேவேளை எங்களின் பாராளுமன்ற உறுப்புரிமை பிடித்துக்கொண்டு இருக்க வேண்டுமென்றில்லை. வேண்டுமென்றால் நாளையென்றாலும் பாராளுமன்றத்தைக் கலையுங்கள். பாராளுமன்றத்தைக் கலைத்துத் தேர்தலை நடத்துங்கள் என அரசாங்கத்தைக் கேட்கின்றோம். எப்போது தேர்தல் நடந்தாலும் நாங்கள் அதற்குத் தயாராகவே இருக்கின்றோம் என்றார்.

# தனியார் இராணுவத்தை உருவாக்கி தாக்க முயற்சி

தோட்டத் தொழிலாளர்களின் பிரச்சினைகள் விடயத்தில் நீங்கள் தோல்வியடைந்துள்ளீர்கள். தோட்டத் தொழிலாளர்கள் விடயத்தில் முறைமை மாற்றம் செய்யப்பட வேண்டும்.

இதேவேளை, இரத்தினபுரி தும்பர தோட்டப் பகுதியில் மக்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. தோட்ட முதலாளிகள் தனியார் இராணுவத்தை அமைக்கின்றனர். தும்பர தோட்டத்தில் அவ்வாறு அமைக்கப்பட்டுள்ளது. அவர்கள் ஊடாக தாக்குதல்களை நடத்துகின்றனர்.

இரத்தினபுரி, மாத்தளை, களுத்துறை போன்ற இடங்களில் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

இந்த நிலைமைகளை மாற்றுங்கள்.

அத்துடன் தோட்டத் தொழிலாளர்களுக்கு 1,700 ரூபாவை வழங்குவதாக வர்த்தமானியைக் காட்டி ஜனாதிபதி கூறுகின்றார். அதனைச் செய்தால் நாங்கள் வரவேற்கின்றோம். ஆனால் அவ்வாறு நடப்பதில்லை. சம்பள அதிகரிப்பு தொடர்பில் கூறும் போதே தோட்டக் கம்பனிகள் வழக்குத் தொடருகின்றன. அப்படியென்றால் அந்த சம்பளம் கிடைக்கப் போகின்றதா? எவ்வாறாயினும் தோட்டத் தொழிலாளர்களுக்கு நியாயத்தைப் பெற்று கொடுங்கள் என்றார்.






# வியாஸ்காந்துக்கு ஆளுநர் வாழ்த்து

இவரை முன்மாதிரியாகக் கொண்டு எமது இளைஞர், யுவதிகள் விளையாட்டுகளிலும் ஆர்வம் காட்ட வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு. கற்றல் மூலம் மட்டுமல்ல விளையாட்டின் மூலமும் உயரங்களை எட்ட முடியும் என்பதை உணர்த்தியுள்ள விஜயகாந்த் வியாஸ்காந்திற்கு மீண்டும் வாழ்த்துக்களை தெரிவிப்பதில் அகமகிழ்வடைகின்றேன் என்றும் தெரிவித்துள்ளார்.

# மைத்திரியின் தடை...



இடைக்கால தடையுத்தரவு தொடர்பான ஆட்சேபனையை எதிர்வரும் 29ஆம் திகதி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யுமாறு பிரதிவாதியான மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட தரப்பினருக்கு அறிவிக்கப்பட்டது.

இந்த மனுவின் பிரதிவாதிகளாக, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தவிசாளர் மைத்திரிபால சிறிசேன, சிரேஷ்ட உப தவிசாளர் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, உப தவிசாளர் பைசர் முஸ்தபா ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

# “பொருளாதாரத்தில் வளர்ச்சி இல்லை”

சிலர் சவால்களை ஏற்றுக்கொள்ளாது நிபந்தனைகளை முன்வைக்கும் போது, தான் நிபந்தனைகள் இன்றி பொறுப்பேற்றதாகவும் கூறியுள்ளார்.

இந்த புதிய இயல்பு நிலைமையில் பொருளாதாரம் முன்னேற்றமடையாது பொருளாதாரம் சிறுமையடைந்துள்ளது. மக்களின் வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. வறுமை அதிகரித்துள்ளதுடன், தொழில் இன்மை அதிகரித்துள்ளது. எரிபொருள், எரிவாயு விலைகள் அதிகரித்துள்ளன. வியாபாரங்கள் வீழ்ச்சியடைந்துள்ளன. போசாக்கின்மை அதிகரித்துள்ளது.

சர்வதேச நாடுகளும் இது தொடர்பில் அறிக்கைகளைத் தயாரித்துள்ளன. மக்களின் தோலில் கடும் சுமைகளை ஏற்படுத்தியே புதிய இயல்பு நிலைமை உருவாகியுள்ளது. ஆனால் தேவையான விடயங்கள் முன்னேற்றம் அடையவில்லை என தெரிவித்துள்ளார்.



# பரீட்சார்த்தியை தாக்கிய மாணவர் இருவர் கைது

தாக்குதலுக்கு உள்ளான பரீட்சார்த்தியான மாணவன், ரத்கம தேவினிகொட பகுதியைச் சேர்ந்தவர். தாக்குதலுக்கு உள்ளான போதிலும் இந்த மாணவன், வியாழக்கிழமை (09) நடைபெற்ற பரீட்சைக்குத் தோற்றியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# டயானாவுக்கு...

குடிவரவு அதிகாரிகளிடம் பொய்யான தகவல்களைச் சமர்ப்பித்து கடவுச்சீட்டு பெறுவதற்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கின் அடிப்படையில் இந்த தடை உத்தரவு விதிக்கப்பட்டுள்ளது.

இரட்டை குடியுரிமையைக் கொண்டிருக்கும், சுற்றுலாத்துறை இராஜாங்க அமைச்சர் டயானா கமகே பாராளுமன்ற உறுப்பினராகத் தொடர்ந்தும் செயற்படுவதைத் தடுக்கும் வகையில் உயர் நீதிமன்றம் ரிட் கட்டளையைப் புதன்கிழமை (08) பிறப்பித்துள்ளது.



## மே 9 தினத்தன்று பொறுப்பற்ற வகையில் செயற்பட்ட

# “பாதுகாப்பு தரப்பினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும்”

மே 9 தினத்தன்று பொறுப்பற்ற வகையில் செயற்பட்ட பாதுகாப்பு தரப்பினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை மீண்டும் வலியுறுத்துவதாக ஆளும் தரப்பு எம்.பி.யான ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (08) இடம்பெற்ற கடை, அலுவலக ஊழியர் (ஊழியத்தையும் வேதனத்தையும் ஒழுங்குப்படுத்தல்), (திருத்தச்) சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கை இராணுவ சேவையில் இருந்து ஓய்வு பெற்றவர்கள் ரஷ்ய இராணுவத்தில் இணைந்து பாரிய நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்துள்ளார்கள்.

பொய்யான வாக்குறுதிகளை வழங்கியே மோசடியாளர்களினால் இவர்கள் ரஷ்ய இராணுவத்தில் கூலிப் படையினராக இணைக்கப்பட்டுள்ளார்கள்.

ரஷ்ய இராணுவத்தில் கூலிப்படையாக சேர்ந்த இலங்கையர்களில் 50 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்னர் அல்லது காணாமல் போயுள்ளார்கள். இவர்களின் உடல்கள் கூட இதுவரை கிடைக்கவில்லை.

நேபாளம், இந்தியா ஆகிய நாடுகள் தமது நாட்டு பிரஜைகளை ரஷ்யாவுக்கு கூலிப் படையினராக அனுப்ப போவதில்லை என்று உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளன. ஆகவே, இலங்கை அரசாங்கம் இவ்விடயம் தொடர்பில் கவனம்



செலுத்த வேண்டும் என்றார்.

ரஷ்யாவில் நெருக்கடிக்குள்ளாகியுள்ள இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்து வருவதற்கு ரஷ்ய அரசாங்கத்துடன் இராஜதந்திர மட்டத்தில் பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்க வேண்டும் என ஜனாதிபதியிடம் வலியுறுத்துகிறேன்.

30 வருடகால யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்த இராணுவத்தினர் பொருளாதார பாதிப்பின் காரணமாகவே ரஷ்யாவுக்கு சென்று நெருக்கடிக்குள்ளாகியுள்ளார்கள்.

ஆகவே, இவர்கள் நாட்டுக்காக ஆற்றிய சேவை தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

இதேவேளை, மே 9 காலி முகத்திடல் போராட்டம் இடம்பெற்று மே 9ஆம் திகதியுடன் இரண்டு ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன. மே 9 போராட்டத்தின் போது, பாராளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அதுகோரல படுகொலை செய்யப்பட்டார். பாகிஸ்தான் நாட்டிலும் இதுபோன்ற சம்பவம் இடம்பெற்றது. இலங்கை பிரஜை ஒருவர் மிலேட்சத்தனமான முறையில் தாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டார். இச்சம்பவம் தொடர்பில் பாகிஸ்தான் நாட்டின் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் விசாரணைகளை மேற்கொண்டார். ஆறுமாத காலத்துக்குள் குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்கப்பட்டது. குற்றவாளிகள் தூக்கிலிடப்பட்டுள்ளார்கள். ஆனால் இங்கு இரண்டு ஆண்டுகள் நிறைவடைந்தும் குற்றவாளிகள் தண்டிக்கப்படவில்லை. அவர்கள் சுதந்திரமாக வாழ்கிறார்கள்.

2022.05.09ஆம் திகதி போராட்டத்தின் போது, கட்சி ஆதரவாளர்கள் பேர வாவியில் தள்ளப்பட்டு, கடுமையாக தாக்கப்பட்டார்கள். பஸ்களும், அரசியல்வாதிகளின் வீடுகளும் வாகனங்களும் தீக்கிரையாக்கப்பட்டன. வன்முறை தீவிரமடைந்த போது பாதுகாப்பு தரப்பினர் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள். பொறுப்பற்ற வகையில் செயற்பட்ட பாதுகாப்பு தரப்பினர் குறித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை மீண்டும் வலியுறுத்துகிறேன் என்றார்.

# “முஜிபுர் ரஹ்மானை நியமிக்க முடியாது”

டயனா கமகேயின் பாராளுமன்ற ஆசன வெற்றிடத்துக்கு ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னாள் எம்.பி. முஜிபுர் ரஹ்மானை நியமிக்க முடியாது. கொழும்பு மாநகரசபையின் முதல்வர் வேட்பாளராக வேட்புமனு தாக்கல் செய்துள்ள நிலையில் அவர் பாராளுமனர் உறுப்பினராக எவ்வாறு பதவிப்பிரமாணம் செய்ய முடியுமென மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் இராஜாங்க அமைச்சர் சானக வக்கும்புர கேள்வி எழுப்பினார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தின்போதே இவ்வாறு கேள்வி எழுப்பிய அவர் மேலும் கூறுகையில்,

முன்னாள் இராஜாங்க அமைச்சரான டயனா கமகேயின் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை உயர் நீதிமன்றம் இரத்து செய்துள்ளது. இந்த வெற்றிடத்துக்கு ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னாள் எம்.பி. முஜிபுர் ரஹ்மானை நியமிக்கவுள்ளதாகக் குறிப்பிடப்படுகின்றது.

இவர் கொழும்பு மாநகரசபையின் முதல்வர் வேட்பாளராக வேட்புமனு தாக்கல் செய்துள்ளார்.அதற்காகவே பாராளுமன்ற உறுப்பினர் பதவியையும் துறந்தார்.

உள்ளூராட்சிமன்ற தேர்தல் ஒத்திவைக்கப்பட்டுள்ள நிலையில் முஜிபுர் ரஹ்மான் வேட்புமனு தாக்கல் செய்த ஒரு வேட்பாளர். வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்த அரச சேவையாளர்கள் வேட்புமனுக்களை இரத்து செய்து தமது பிரதேசத்தின் சேவைகளை முன்னெடுக்க வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்குமாறு தேர்தல் ஆணைக்குழுவிடம் வலியுறுத்தினார்கள். ஆனால் தேர்தல் ஆணைக்குழு இடமளிக்கவில்லை



.சுய விருப்பத்துக்கு அமைய வேட்பு மனுக்களை இரத்து செய்ய முடியாததென ஆணைக்குழு தெரிவித்தது.

பாராளுமன்ற உறுப்பினராக முஜிபுர் ரஹ்மான் பதவியேற்கும் போது உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்காக தாக்கல் செய்த வேட்பு மனு இரத்தாகாது.அரச சேவையாளர்களுக்கு வேட்புமனுவில் இருந்து விலக முடியாது என்றால் முஜிபுர் ரஹ்மானால் எவ்வாறு மீண்டும் பாராளுமன்ற உறுப்பினராக முடியும்?

இது கொழும்பு மாநகரசபைக்கு வேட்பு மனு தாக்கல் செய்த அனைவருக்கும் பாரியதொரு பிரச்சினையாகும். உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கு மீள் அழைப்பு விடுக்கப்படும் போது இவர் பாராளுமன்ற உறுப்புபினராகவா போட்டியிடுவார்?வேட்புமனு உள்ள நிலையில் பாராளுமன்ற உறுப்பினராக பதவியேற்பதில் சிக்கல் உள்ளது. தேர்தல் ஆணைக்குழு சுயாதீனமானதென்றால் இவ்விடயத்தில் நியாயத்துடன் செயற்பட வேண்டும் என்றார்.

# “என்ன திகதியில் ஆரோக்கியத் துவாய் வழங்கப்படும்?”

341 உள்ளூராட்சி மன்றங்களுக்கு தலா 100 இலட்சம் வீதம் ஒதுக்கும் பணத்தை, கல்வி அமைச்சின் ஊடாக, அந்த 3,410 மில்லியனில் 3,410 பாடசாலைகளில் 3,410 திறன் வகுப்பறைகளை நிறுவ முடியும். இத்தகைய முக்கியமானதொரு திட்டத்திற்குச் செல்வது நாட்டை வங்குரோத்து நிலையிலிருந்து மீட்க காரணமாக அமையும். இந்த பணிக்கு குறித்த பணம் பயன்படுத்தப்படுமாக இருந்தால், தேசிய முக்கியத்துவம் வாய்ந்த வேலைத்திட்டத்திற்குப் பயன்படுத்தப்பட்ட நிதியாக அமையும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

பாடசாலை பிள்ளைகளுக்கு வழங்கப்படும் உணவைச் சகல பிள்ளைகளுக்கும் வழங்க வேண்டும். பாகுபாடின்றி கொடுக்க வேண்டும். இது குழந்தைகளின் மன நிலையைப் பாதிக்கும் நடவடிக்கை எனவும் சுட்டிக்காட்டினார்.

கல்வித்துறையில் நிலவும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் வியாகைகிழமை (09) பாராளுமன்ற நிலையியற் கட்டளை 27(2)இன் கீழ் கேள்வி எழுப்பும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு குறிப்பிட்டார்.

மேலும் அவர் குறிப்பிட்டுள்ளதாவது, பெண் பிள்ளைகளின் ஆரோக்கியத் துவாய் விடயத்தில் அரசாங்கம் செயல்படுத்தவுள்ள திட்டத்தை ஒட்டுமொத்த பெண்களையும் இலக்காக் கொண்டு செயல்படுத்த வேண்டும். என்ன திகதியில் மாணவிகளுக்கு ஆரோக்கியத் துவாய் வழங்கப்படும்?

கல்வி என்பது குழந்தைகளின் அடிப்படை உரிமையாகும். நாட்டில் இலவசக் கல்வி முறை இருந்தாலும், இந்நாட்டின் சகல பிள்ளைகளுக்கும் ஒரே மாதிரியான உயர் தரத்துடன் கூடிய கற்றல் செயற்பாட்டுக்கான வாய்ப்பு இங்கு இல்லை. இந்நாட்டின் கல்வி முறை முழுமையாகச் சீர்திருத்தப்பட வேண்டும்.

அரசாங்கத்தால் முன்வைக்கப்பட்டுள்ள உத்தேச தேசிய கல்விக் கொள்கையில் 10 வருடங்களுக்குள் பாடசாலை கற்றல் நடவடிக்கைகளை முன்னெடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த முன்மொழிவுகள் சரியானதாக இருந்தால், குறைபாடுகளை நிவர்த்தி செய்து, அடுத்த 2-3 ஆண்டுகளில் இதனை நடைமுறைப்படுத்த வேண்டும்.

உலகில் எதிர்வரும் காலங்களில் உருவாக்கப்படும் புதிய வேலை வாய்ப்புகளில் கவனம் செலுத்தும் வகையில், தேசிய கல்வி எவ்வாறு மாற்றப்பட வேண்டும் என்பது குறித்து ஆராயப்பட்டிருந்தால், அது குறித்து அறிய விரும்புகிறோம்.

அவ்வாறே பாடசாலைகளில் நிலவும் மனிதவள மற்றும் பௌதீக வள பிரச்சினைகளைத் தீர்க்க அரசாங்கம் எடுக்கவுள்ள நடவடிக்கைகள் யாது?

மருத்துவ நிபுணர்களின் கூற்றுப் பிரகாரம் பெரும்பாலான குழந்தைகளின் 70% மூளை வளர்ச்சி பிறப்பு முதல் ஐந்து வரையில் என சுட்டிக்காட்டியுள்ளனர். நம் நாட்டில் பாலர் கல்வி முறையான ஒழுங்கு முறைப்படுத்தலுக்கும், தரக் கட்டுப்பாட்டிற்கும் உட்பட்டதாக அமைய வேண்டும். இது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும்.

அத்துடன், 2023இல் உலகை வென்ற பல புதிய தொழில்நுட்பங்கள் காணப்படுகின்றன. நமது நாட்டில் இலவசக் கல்வி முறையில், கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் பாடசாலை மாணவர்களுக்கு இந்தப் புதிய தொழில்நுட்ப அறிவு இல்லாத நிலையே காணப்படுவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

# முதிரை மரக்குற்றிகள் மீட்பு

■ சண்முகம் தவசீலன்



முல்லைத்தீவு- புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இரணைப்பாலை பகுதியில் தனியார் காணி ஒன்றில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த நிலையில், பல இலட்சம் பெறுமதியான நூறுக்கும் மேற்பட்ட முதிரை மரக்குற்றிகள் முல்லைத்தீவு பொலிஸாரால் புதன்கிழமை (08) மீட்கப்பட்டுள்ளது.

வனவள திணைக்களம், பொலிஸார் உள்ளிட்ட பல்வேறு திணைக்களங்களின் ஆதரவுடனே இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறுவதாகவும் இதனால் இவர்களது சட்டவிரோத செயற்பாடுகளுக்கு எதிராக யாரும் நடவடிக்கை எடுப்பதில்லை எனவும் மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இந்நிலையில், இரணைப்பாலை பகுதியில் பாரியளவில் மரக்குற்றிகள் கொண்டுவந்து பதுக்கி வைத்திருப்பதாக புதுக்குடியிருப்பு பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்ட போதும், அவர்கள் அது தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்காது அலட்சியப் போக்குடன் செயற்பட்டதாக வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபருக்குத் தகவல் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, முல்லைத்தீவு விசேட பொலிஸ் அணியினர் நடத்திய சோதனையில் போது, இவ்வாறு தனியார் காணி ஒன்றிலிருந்து சுமார் 100க்கு மேற்பட்ட அண்ணளவாக 50 இலட்சத்திற்கும் அதிக பெறுமதியுடைய முதிரை மரக்குற்றிகள் கைப்பற்றப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை முல்லைத்தீவு பொலிஸார் மேற்கொண்டு வருவதுடன், விசாரணைகளின் பின்னர் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# “சட்டவிரோத மதுபான உற்பத்தி பாரிய பிரச்சினைகளை ஏற்படுத்தும்”

2023ஆம் ஆண்டு காலப்பகுதியில் மதுபான உற்பத்திகள் 19 சதவீதத்தால் குறைவடைந்துள்ளது. அதிகளவில் விற்பனை செய்யப்படும் 180 மில்லி லீற்றர் மதுபான போத்தல் உற்பத்தி 15 மில்லியனால் வீழ்ச்சியடைந்துள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (09) இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினா நேரத்தில் சுயாதீன எதிரணி எம்.பி. ஜயந்த சமரவீர எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும்போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

மேலும் அவர் கூறுகையில், 2023 காலப்பகுதியில் மதுபான உற்பத்திகள் 19 சதவீதத்தால் குறைவடைந்துள்ளது. அதிகளவில் விற்பனை செய்யப்படும் 180 மில்லி லீற்றர் மதுபான போத்தல் உற்பத்தி 15 மில்லியனால் வீழ்ச்சியடைந்துள்ளது.

2022இல் 750 மில்லி லீற்றர் மதுபான போத்தல்கள் 57.7 மில்லியன் அளவில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளதுடன், அந்த எண்ணிக்கை 2023இல் 39.5 மில்லியன் வரை குறைவடைந்துள்ளது. 2022இல் 375 மில்லி லீற்றர் மதுபான போத்தல்கள் 46.8 மில்லியன் அளவில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளதுடன், 2023இல் 36.6 மில்லியன் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது .

2022 இல் 105.8 மில்லியனாக உற்பத்தி செய்யப்பட்ட 180 மில்லி லீற்றர் மதுபான போத்தல்களின் எண்ணிக்கை 2023இல் 90.5 மில்லியனாக குறைவடை ந்துள்ளன. அத்துடன் 2023இல் 214 மதுபானசாலை அனுமதி பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. இவற்றில் 147 அனுமதி பத்திரங்கள் சுற்றுலாத்துறை சேவை கைத்தொழிலுக்காக வழங்கப்பட்டுள்ளன. மது வரி திணைக்களம் 2023.01.01ஆம் திகதியளவில் 5,730 மதுபான உரிமங்களை வழங்கியுள்ளது. சட்ட ரீதியில் அனுமதி வழங்காமல் இருந்தால் சட்டவிரோத மதுபான உற்பத்திகள் தீவிரமடையும். அது பாரிய பிரச்சினைகளை ஏற்படுத்தும் என்றார்.



# “நிகழ்ச்சி நிரலை செயல்படுத்த வாய்ப்பு கொடுங்கள்”

## சபையில் சஜித்திடம் சபாநாயகர் வேண்டுகோள்

நாட்டின் பொருளாதார நிலைமை தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பாராளுமன்றத்தில் தெரிவித்த கருத்து தொடர்பில் பாராளுமன்ற விவாதத்தை நடத்த தயார் என அரச தரப்பு பிரதம கொறடாவும் அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

பாராளுமன்றம் வியாழக்கிழமை (09) சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது.

இதனையடுத்து ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க விசேட உரை நிகழ்த்தினார்.

ஜனாதிபதியின் உரை முடிவடைந்தவுடன் எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெளிவுபடுத்தல் ஒன்றை ஜனாதிபதியிடம் பெற விரும்புவதாகக்கூறி நீண்ட நேரம் உரையாற்றத் தொடங்கினார்.

இதற்கு அரச தரப்பினர் எதிர்ப்புத் தெரிவித்த நிலையில், சபாநாயகரும் உரையாற்றல் விடயத்தை கூறுமாறு அறிவுறுத்தினார். ஆனால், எதிர்க்கட்சித் தலைவர் தொடர்ந்தும் உரையாற்றினார்.

இந்நிலையில், அரச தரப்பு பிரதம் கொறடாவும் அமைச்சருமான பிரசன்ன ரணதுங்கவுக்கும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கும் இடையில் விவாதம் ஏற்பட்டது.

எதிர்கட்சித் தலைவரின் உரையில் குறுக்கிட்ட அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, சபாநாயகர் அவர்களே, இது விவாதத்திற்கு செல்கிறது. ஜனாதிபதியின் உரை குறித்து விவாதம் நடத்தலாம். நாங்கள் எதிர்க்கவில்லை, ஆ னால், தெளிவுபடுத்த இவர் நேரம் கேட்டு விட்டு உரையாற்றுகின்றார் இப்படிச் சென்றால் நிகழ்ச்சி நிரலை நடைமுறைப்படுத்த முடியாது என்றார்.

இதன்போது எழுந்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க - சபாநாயகர் அவர்களே, இந்தச் சபையில் பல்வேறு கருத்துக்கள் நிலவுவதால் இது தொடர்பில் விவாதம் நடத்தினால் நல்லது. மேலும் இதற்கெல்லாம் எதிர்க்கட்சித் தலைவர்தான் பொறுப்புக் கூற வேண்டும். அவர் பிரதமர் பதவிக்கு வந்திருந்தால், இது எதுவும் நடக்காது. என்னால் முடிந்ததைச் செய்தேன் என்றார்.

ஜனாதிபதியின் இந்தக்கருத்தால் அரச தரப்பில் பெரும் சிரிப்பொலி எழுந்தது.

இதனையடுத்து, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன - எதிர்க்கட்சித் தலைவர் அவர்களே, இனியும் நேரத்தை வீணடிக்காதீர்கள் என்றார்.

இதற்கு பதிலளித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, எமக்கு ஏன் பேச்சு சுதந்திரம் இல்லை?, எங்களால் பேச முடியாதா? பாரபட்சமாக இருக்காதீர்கள். உண்மைகளை முன்வைக்க என்னை அனுமதியுங்கள். என்னை வாயை மூடச் சொல்லாதீர்கள் என்றார்.

இதற்கு சபாநாயகர் பதில ளிக்கையில், உண்மைகளை தெளிவுபடுத்த சந்தர்ப்பம் கேட்டீர்கள். பேசச் செல்லும்போது தேவையற்ற பிரச்சினைகள் ஏற்படும் என்றார்.

இதன்போது எழுந்த தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார - சபாநாயகர் அவர்களே ஜனாதிபதி உரை நிகழ்த்தினார். அதுபற்றி நேரடியாக விளக்கம் கேட்டாலும் பரவாயில்லை. அரை மணி நேரத்திற்கும் மேலாக பேசுகின்றார் என்றார்.

மீண்டும் எழுந்த அமைச்சர் பிரசன்ன ரணதுங்க சபாநாயகர் அவர்களே, இது ஒரு விளக்கமல்ல. ஒரு கதை. ஜனாதிபதி சபையை விட்டு வெளியேறும் போது எதிர்க்கட்சித் தலைவர் பயப்படப் போகின்றீர்களா எனக் கேட்டார். அனுரகுமார திஸாநாயக்கவும் எதிர்க்கட்சித் தலைவரை விவாதத்திற்கு அழைத்தபோது, அதையே கேட்டார். அந்த ஆட்கள் வாதிட்டாலும் பரவாயில்லை. எனவே சபை நிகழ்ச்சி நிரலை செயல்படுத்த வாய்ப்புக் கொடுங்கள் என்றார். இதனையடுத்து வாதபிரதிவாதங்கள் முடிவுக்கு வந்தன.

# இரவு நேரங்களில் விசேட சுற்றி வளைப்பு

■ எம்.எஸ்.எம்.ஹனீபா



சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாத உணவுகளை கையாளும் நிலையங்கள் மற்றும் விற்பனை நிலையங்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுவருவதாக, அட்டாளைச்சேனை சுகாதார வைத்தியதிகாரி ஏ.எம்.முகம்மது இஸ்ஸதீன் வியாழக்கிழமை (09) தெரிவித்துள்ளார்.

உணவகங்கள், உணவுகள் கையாளும் நிலையங்கள் மற்றும் விற்பனை நிலையங்களில் பாவனைக்கு உதவாத உணவுப் பண்டங்கள் விற்பனை செய்யப்படுவதாக பொது மக்களால் செய்யப்பட்ட முறைப்பாட்டையடுத்து பொதுச் சுகாதார பரிசோதகர்களால் உணவகங்கள் மற்றும் உணவு கையாளும் நிலையங்கள், பேக்கரிகள் என்பன திடீர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் இரவு நேரங்களிலும் விசேட சுற்றி வளைப்புகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பரிசோதனையின் போது விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த பாவனைக்குதவாத உணவுப் பண்டங்கள், பொருட்கள், காலாவதியான பொருட்கள் என்பன கைப்பற்றப்பட்டு அழித்தொழிக்கப்பட்டு வருவதாகவும், உரிமையாளர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

உணவு சட்ட விதிமுறைகள், நுகர்வோர் விவகார சட்டங்கள் மற்றும் அதன் விதிமுறைகளுக்கமைய வேண்டுமெனவும், உணவு தயாரிப்போர், உணவு விநியோகிக்கும் இடம், பயன்படுத்தும் உபகரணம் போன்றவற்றின் தூய்மையாக வைத்திருக்க வேண்டுமெனவும், உணவகங்களில் பணியாற்றுபவர்கள் கையுறை போன்றவற்றை பாவிக்க வேண்டுமென அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

அத்துடன், உணவு பாதுகாப்பு சட்ட திட்டங்களை மீறி பாவனைக்குதவாத உணவுப் பொருட்களை விற்பனை செய்யும் நிலையங்கள் கண்டுபிடிக்கப்பட்டால் அதன் உரிமையாளருக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு, அவ்வாறான நிலையங்கள் மூடப்படுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் இருவர் கைது



சட்டவிரோதமான முறையில் வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட சுமார் 15 இலட்சம் ரூபாய் பெறுமதியான சிகரெட்டுகளை இலங்கைக்குக் கொண்டு வந்த இருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து போதைப்பொருள் ஒழிப்பு திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட 860,000 ரூபாய் பெறுமதியான 8,600 சிகரெட்டுகள் அடங்கிய 43 அட்டைப்பெட்டிகளுடன் ஓமானின் மஸ்கட்டில் இருந்து விமான நிலையத்திற்கு வந்த பரகடுவ பிரதேசத்தைச் சேர்ந்த 39 வயதுடைய ஒருவரும்,

640,000 ரூபாய் பெறுமதியான 6,400 சிகரெட்டுகள் அடங்கிய 32 சிகரெட் அட்டைப் பெட்டிகளுடன் டுபாயில் இருந்து வந்த கொழும்பு-14, நாகலகம் பிரதேசத்தைச் சேர்ந்த 29 வயதுடைய ஒருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பிலான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# குஷ்டன் வந்த நடன கலைஞர் கைது

ஐந்து மில்லியன் ரூபாவிற்கும் அதிகமான பெறுமதியான ‘குஷ்’ என்ற போதைப்பொருளை இலங்கைக்குக் கொண்டு வந்த நபரை கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவு அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

ஹோமாகம பிரதேசத்தில் வசிக்கும் 32 வயதுடைய கிளப் நடனக் கலைஞரான இவர் தனது சூட்கேஸில் மறைத்து வைத்து இந்த ‘குஷ்’ இலங்கைக்குக் கொண்டு வந்துள்ளார்.


05 கிலோ 278 கிராம் எடையுடைய இந்த ‘குஷ்’ கஞ்சா 36 தனித்தனியாகப் பொதி செய்யப்பட்ட பொதியில் அடைக்கப்பட்டிருந்தது.


தாய்லாந்தின் பேங்கொக்கில் இருந்து எயார் ஏசியா விமானம் FD-140இல் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தார்.

# வீதி பாதுகாப்பு விழிப்புணர்வு நடைபவனி

■ நிதர்ஷன் வினோத்

விதி பாதுகாப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டத்தின் ஒரு பகுதியாக வியாழக்கிழமை (09) மு.ப 8.30 மணியளவில் வேம்படிச் சந்தியிலிருந்து யாழ். போதனா வைத்தியசாலை வீதியூடாக காங்கேசந்துறை வீதி சத்திரச் சந்தி வரை வீதிப்பாதுகாப்பு விழிப்புணர்வு நடைபவணி இடம்பெற்றுள்ளது.





இதன்போது, வீதியில் காணப்படும் இடர்பாடுகளுடைய இடங்களை அடையாளம் காணல், வீதிப் பாதுகாப்பு மற்றும் வாகன நடைமுறைகளைப் பின்பற்றல் பரிசோதனை போன்ற செயற்பாடுகள் நடைபெற்றுள்ளது.

குறித்த செயற்பாட்டைத் தொடர்ச்சியாக ஏனைய பகுதிகளில் நடத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் வடக்கு மாகாண பிரதம செயலாளர், வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர், யாழ்ப்பாண மாவட்ட பதில் செயலாளர், வடக்கு மாகாண மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்கள ஆணையாளர், மோட்டார் வாகன பரீட்சகர்கள், அதிகாரிகள், யாழ்ப்பாண பிரதேச செயலாளர், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பணிப்பாளர், போக்குவரத்து பொலிஸார், வைத்தியர்கள், மாநகர சபை ஆணையாளர் உள்ளிட்ட துறைசார் அதிகாரிகள் என பலரும் கலந்துகொண்டுள்ளனர்.

“ வீதியில் இடர்பாடுகளுடைய இடங்களை அடையாளம் காணல், வீதிப் பாதுகாப்பு மற்றும் வாகன நடைமுறைகளைப் பின்பற்றல் பரிசோதனை போன்ற செயற்பாடுகள் நடைபெற்றுள்ளது

# ஜனாதிபதித் தேர்தலுக்கான களமே சூடுபிடிக்கும்

இலங்கையில் மட்டுமன்றி, பல நாடுகளில் தேர்தல் வருடமாகவே இந்த வருடம் உள்ளது. இந்தியாவில் வாக்களிப்பு நடந்துகொண்டிருக்கின்றது. கனடா, மாலைத்தீவு உள்ளிட்ட நாடுகளில் வாக்களிப்புகள் நிறைவடைந்துள்ளன. அமெரிக்கா உள்ளிட்ட இன்னும் சில நாடுகளில் தேர்தல் நடைபெறவுள்ளது.

இந்நிலையில், இந்திய மக்களவைத் தேர்தலில் அமெரிக்கா தலையிட முயற்சி செய்வதாக ரஷ்யா பகிரங்க குற்றச்சாட்டை முன்வைத்துள்ளது. உள்நாட்டு அளவில் நிலவும் அரசியல் சமநிலையைச் சீர்குலைக்க அமெரிக்கா முயற்சிப்பதாகவும் ரஷ்யா தெரிவித்துள்ளது.

பல நாடுகளில் தேர்தல் களம் சூடுபிடித்திருந்த நிலையில், நமது நாட்டில், ஜனாதிபதித் தேர்தலா? அல்லது பாராளுமன்ற தேர்தலா? முதலில் நடைபெறும் என்று யூகிக்கமுடியாத நிலைமையொன்று இருந்தது. எனினும், ஜனாதிபதி தேர்தலுக்கான வாக்குப்பதிவு செப்டம்பர் 17 முதல் ஒக்டோபர் 16 வரை நடைபெறும் என தேர்தல்கள் ஆணைக்குழு, புதன்கிழமை (09) அறிவித்துள்ளது.

அரசியலமைப்பு மற்றும் 1981ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க ஜனாதிபதி தெரிவு விசேட ஏற்பாடுகள் சட்டத்தின் விதிமுறைகளுக்கு உட்பட்டு, குறிப்பிட்ட காலத்திற்குள் வேட்புமனுக்கள் கோரப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கிடையே, ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி உள்ளிட்டவை ஜனாதிபதி வேட்பாளர்களைப் பகிரங்கமாக அறிவித்துவிட்டது. பிரதான கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, தங்களுடைய ஜனாதிபதி வேட்பாளர்களை இன்னுமே அறிவிக்கவில்லை.

இதற்கிடையே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஸ்தாபக தலைவர் பசில் ராஜபக்‌ஷவுக்கும் இடையில், தேர்தல் தொடர்பில் ஐந்து சுற்றுப் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றன. அதில், எவ்விதமான தீர்மானங்களும் எட்டப்படவில்லை.

ஜனாதிபதித் தேர்தலை நடத்தாது, பாராளுமன்றத்தைக் கலைத்து பொதுத் தேர்தலை நடத்துமாறு, பசில் ராஜபக்‌ஷ, ஜனாதிபதியிடம் வலியுறுத்தியுள்ளதாகவும், செய்திகள் வெளியாகியிருந்தன. எனினும், களநிலைமையை ஆராய்ந்தே, ஜனாதிபதி தீர்மானத்தை எடுக்கவுள்ளார் என உள்ளக தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும், மே 15ஆம் திகதிக்குப் பின்னர், பாராளுமன்றத்தை ஜனாதிபதி கலைப்பார் என்றும் செய்திகள் வெளியாகியுள்ளன. இதற்கிடையே, ஜனாதிபதி தேர்தலுக்கான திகதிகளைத் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. இதனால், ஜனாதிபதித் தேர்தல் களம் சூடுபிடிக்கும்.

பிரதான தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்டதன் பின்னர், கட்சிகளின் மீதும், வேட்பாளர்களின் மீதும் சேறு பூசும் நடவடிக்கைகளே முன்னெடுக்கப்படும். வெறுப்பு பேச்சுகளுக்குக் குறைவே இருக்காது. கடந்த காலங்களில் இவ்வாறான கசப்பான சம்பவங்களைக் கண்ணுற்றோம். கட்சிகள், வேட்பாளர்கள் மீது மட்டுமன்றி, இனங்களுக்கு இடையில் குரோதங்களை ஏற்படுத்தும் விதமாகவும் வெறுப்பு பேச்சுக்கள் கட்டவிழ்த்து விடப்பட்டன.

தேர்தலில் களமிறங்கும் வேட்பாளர்களும், கட்சிகளும், அவர்களைச் சார்ந்தவர்களும் எதிர்த்தரப்பு வேட்பாளர்களுக்குச் சேறு பூசாமல், நாட்டின் எதிர்காலத்துக்கும் மக்களுக்கும் நன்மையளிக்கும் வகையிலான திட்டங்களை முன்வைத்து, தேர்தல் விஞ்ஞாபனங்களைத் தயாரித்து, களத்தில் குதிப்பதே ஜனநாயகத்துக்கு உகந்தது.


தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.


அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



## வாழ்வியல் தரிசனம்

கண்டிப்பு கூட, கனிவுதான். சந்தோஷத்துடன் ஏற்றுக்கொள்க! ஒருவரை முழுமனிதனாக மாற்றுவது, அன்பானவர்களின் கண்டிப்பு அல்லவா?

மெல்ல மெல்ல பட்டை தீட்டப் படுபவர்களில் நாங்களும் ஒருவர். பிறந்தவுடன் முழுமனிதனாகிவிட முடியாது. ஒவ்வொரு பராயத்திலும், புதுப்புது அனுபவக் குவியல்கள்; பெற்றோர், நண்பர்கள், ஆசான்கள், உறவுகள் எனப் பலரும் சொல்லும் அறிவுரைகள், பெரும் செல்வங்களைவிட மேலானது.

சிலவிடயங்களை இளைய தலைமுறையினரிடம் இருந்தும் கற்க வேண்டும். அறிவு பல திசைகளிலிருந்தும் புறப்பட்டு, எங்களிடம் வருகின்றது. இவற்றை நெஞ்சில் இருத்துக!

மனம் முழுக்க மழைதான் பெய்ய வேண்டும். சுடு நெருப்பு அல்ல! வார்த்தைகள் குளுமையாகவும் தென்றல் காற்றின் சுகானுபவத்தையும் ஊட்ட வேண்டும். கனிவுடன் பழகுதல், இனிமையை வழங்குதல் போலாகும். பாகுபாட்டை நோக்கினால், சமூகமும் அவர்களை நோக்காது. அன்பைக் காட்டாதவன், தனிமையில் புரள்கின்றான். உலகைத் தூய்மைப்படுத்த, எந்தத் தனிமனிதனையும் புறக்கணித்தலாகாது. அன்பே இன்பம்!

– பருத்தியூர் பால. வயிரவநாதன்

கறுப்பு யூலையின் நாற்பதாண்டுகளின் பின் –51:

# 1983: கலவரம் என்றழைக்கப்படும் கொலைக்களம்



தெ.ஞாலசீர்த்தி மீநிலங்கோ

இலங்கையின் தலைவிதியையே மாற்றி எழுதிய நிகழ்வு 1983 தமிழருக்கெதிராக அரசாங்கத்தால் கட்டவிழ்த்து விடப்பட்ட இன வன்முறையாகும். ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் இனத் துவேசமும் குள்ளநரித்தனமும் நன்கறியப்பட்டவை. பொருளாதார நெருக்கடியிலும் அரசியல் நெருக்கடியிலும் சிக்கியிருந்த தனது அரசியல் எதிர்காலத்தைக் காப்பாற்றியாகவேண்டிய கட்டாயத்தில் அவர் இருந்தார். இதனாலேயே 1980களின் தொடக்கம் முதல் சிங்கள அதிதீவிர இனவாதப் பேச்சுகளை அனுமதித்தார். குறிப்பாக தொழிற்றுறை அமைச்சராக இருந்த சிறில் மத்தியு வெளிப்படையாகவே இனவாதப் பேச்சுகளை பேசினார். ஜே.ஆர். இதை அனுமதித்தார். தனது இனவாதக் கருத்துக்களை ‘கண்ணுக்குத் தெரியாத சிங்களவரின் எதிரிகள்’ என்ற தலைப்பில் நூலாக வெளியிட்டார். இது இலங்கையின் மத்தியதரவர்க்கத்திடம் செல்வாக்குப் பெற்ற நூலாக மாறியது.

1970களின் நிறைவுப் பகுதிகளிலேயே தமிழர்களுக்கு எதிரான இனவாம் உருவானது. இது திட்டமிட்டு செய்யப்பட்டது. ஏனெனில், 1983க்கான முன்னோட்டம் 1977இலேயே நடைபெற்று விட்டது. ஆனால், யாரும் அதை அவ்வாறு கணிப்பிடவில்லை. மாறாக, அரசாங்கத்துக்கும் தமிழ்த் தரப்புகளுக்கமான பேச்சுவார்த்தைகளும், தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களின் அரசாங்கத்துடனான நெருக்கமும் 83யை எதிர்வு கூற இயலாதவாறு உருமறைப்புச் செய்திருந்தன. இந்தப் பின்புலத்தில் 1983 ஜூலை மாதம் 23ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் இராணுவ வீரர்கள் 13 பேர் விடுதலைப் புலிகளால் கொல்லப்பட்டமையானது, 1983இல் தமிழர்கள் மீது கட்டமைக்கப்பட்ட வன்முறைக்கான உடனடிக் காரணமாகும்.

13 இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டதைக் காரணம் காட்டி, மறுநாள் கொழும்பில் தமிழர்கள் மீதான தாக்குதல்கள் தொடர்ந்தன. கொழும்பில் ஒரு வார கால வெறியாட்டத்தை ஆறு கட்டங்களாகப் பிரிக்கலாம், முதலாவது, ஞாயிறு இரவு தொடங்கிய கடையர் கும்பல்களின் தமிழர் மீதான வன்முறை.

இரண்டாவது, திங்கட்கிழமை தமிழர்களைத் திட்டமிட்டு மிரட்டல், தமிழர் சொத்துக்கள் அழித்தல்.

மூன்றாவது, திங்கட்கிழமை மதியம் மற்றும் செவ்வாய்க்கிழமை கொள்ளையடித்தல், தீவைத்தல் மற்றும் கொலை செய்தல்.

நான்காவது, புதன்கிழமை வன்முறை குறைகிறது.

ஐந்தாவது, வியாழன் ஒரு மந்தமான சூழலோடு இணைந்த வாந்திகள் வெள்ளிக்கிழமை பரவின. ஆறாவது, இக்காலப்பகுதியில் சிங்களவர்கள் பெரும்பான்மையாக வாழும் அனைத்துப் பகுதிகளுக்கும், குறிப்பாக நுவரெலியா மற்றும் பதுளை நகரங்களுக்கும் இந்த வாரத்தில் வன்முறை பரவியது. இது திருகோணமலையில் தொடர்ந்தது, அங்கு ஒரு மாதத்திற்கும் மேலாக தமிழர்களின் வீடுகள் மற்றும் கடைகள் எரிக்கப்பட்டன. இந்த வன்முறையில் சுமார் 3,000க்கும் அதிகமானோர் கொல்லப்பட்டார்கள், வன்முறையில் ஈடுபடும் காடையர்களுக்கு பொலிஸார் உதவியாக இருந்த பல நேரடிச் சாட்சிகள் பதிவு செய்துள்ளன. வெலிக்கடை சிறைச்சாலையில் 53 தமிழ் அரசியல் கைதிகள் படுகொலை செய்யப்பட்டார்கள். தமிழர்களுக்குச் சொந்தமான சொத்துக்கள் பெரும் சேதத்துக்கு உள்ளாக்கியது. இவ்வன்முறை 135,000 அகதிகளை உருவாக்கியது, அவர்களில் 30,000 பேர் தமிழ்நாட்டிற்குச் சென்றார்கள். இந்த வன்முறைகளில் ஏற்பட்ட பொருளாதார சேதம் 100 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கும் அதிகமானது என கணக்கிடப்பட்டுள்ளது. கொழும்பில் பாதிக்கப்பட்டவர்கள் சிங்களவர்கள் மத்தியில் வாழ்ந்த விசுவாசமான, பழைமைவாத தமிழர்கள், அவர்களில் பலர் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் ஆதரவாளர்கள். பலர் உண்மையில் ஜனாதிபதியின் (வெள்ளவத்தை) மற்றும் பிரதமரின் (பெட்டா) தேர்தல் தொகுதிகளின் கட்சி அங்கத்தவர்களாக இருந்தவர்கள்.

1983 இன வன்முறைகள் பற்றி நிலவும் எண்ணம் ஏதெனின், விடுதலைப் புலிகளின் தாக்குதலில் 13 அரசாங்கப் படையினர் பலியானதாலேயே 1983 கலவரம் நிகழ்ந்தது என்பதாகும். வட பகுதியில் இராணுவத்தைப் பெருந்தொகையிற் குவிக்கும் தேவை என்ன என்பதோ, முற்றிலும் சிங்களவர்களையே கொண்ட இராணுவத்தினரினதும் மிகச் சில தமிழரையே கொண்ட பொலிஸ் படையினதும் நடத்தையால் மக்கள் எவ்வளவு வெறுப்புற்றிருந்தனர் என்பதோ தெற்கில் பேசப்படவில்லை. அதைவிட, 13 படையினரின் சாவுக்குப் பழி வாங்கலாகப் படையினர் அத்தாக்குதல் நடந்த அயலில் நடத்திய வெறியாட்டமும் அதில் சாதாரணத் தமிழ் மக்கள் பலர் கொல்லப்பட்டதும் பேசப்படுவதில்லை. இலங்கையின் அரசியல் வரலாற்றில் அதிகம் பேசப்படாத பக்கங்கள் இவை. இதன் பின்னால் ஒரு இனத்துவ கதையாடல் இருக்கிறது. அதாவது, தமிழர்கள் இழைத்த தவற்றுக்குத் தண்டனை’ என்பதே அது.

ஆதிகம் பேசப்படாத இன்னொரு செய்தியும் உண்டு. யாழ்ப்பாணத்தில் கொலையுண்ட படையினரின் சடலங்களைக் கொழும்பிற்குக் கொண்டுவந்து அதை ஒரு அரசியல் நிகழ்வாக்கியே 1983 வன்முறை கிளறப்பட்டது. இறந்த இராணுவ வீரர்களின் சடலங்களை அவரவர் ஊர்களுக்கு அனுப்புவதே சிறந்தது என்பதைப் பிரதமர் பிரேமதாச பரிந்துரைத்து வலியுறுத்தினார். ஆனால், அதையும் மீறி ஜனாதிபதி சடலங்களைக் கொழும்புக்குக் கொண்டுவர உத்தரவிட்டதன் பின்னால் ஆழமான நோக்கங்கள் இருந்தன. அதேவேளை, இச்சடலங்கள் கொழும்பை வந்தடையும் முன்பே இவ்வன்முறை திட்டமிடப்பட்டது என்பதை நிறுவப் போதுமான தரவுகள் உள்ளன. ஜனாதிபதி இந்த வன்முறையைக் கட்டுக்குள் கொண்டுவரத் தவறினார்.

தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியைப் பணிவிப்பதற்கு சில ஆயுதங்கள் ஜெயவர்த்தன வசம் இருந்தன. ஜெயவர்தனவின் நெருங்கிய சகாவாக எஸ்.ஜே.வி.செல்வநாயகத்தின் மருமகன் ஏ.ஜே.வில்சன் இருந்தார். பாராளுமன்ற சுகபோகங்களைத் துறக்க கூட்டணி உறுப்பினர்கள் தயாரில்லை என்பதும் அவருக்கும் தெரியும். அதேவேளை, கூட்டணித் தலைமை எவ்வகையிலும் தமிழ் மக்களைக் கிளர்ந்தெழுவிக்க ஆயத்தமில்லை என்பதை 1977 அளவிலேயே ஜயவர்தன அறிந்திருந்தார். வடக்கின் தமிழ் மக்களைப் பணியவைப்பதான அவருடைய இலக்கை அடைய இளைஞர்களின் எழுச்சி தடையாயிருந்தது. இதை ஒழிக்க அவர் மேற்கொண்ட நடவடிக்கைகள் எதுவும் வெற்றியளிக்கவில்லை.

1982 ஒக்டோபரில் நடந்த ஜனாதிபதித் தேர்தலிலும் அடுத்து 1982 டிசெம்பரில் பாராளுமன்றத்தின் ஆயுட் காலத்தைத் தேர்தலின்றி ஆறு ஆண்டுகளால் நீடிக்க அவர் நடத்திய சர்வசன வாக்கெடுப்பிலும் தமிழர், குறிப்பாக வட புலத்து மக்கள், அவருடைய முகத்தில் அறைவதுபோல அவருக்கு எதிராகவும் பாராளுமன்றத்தின் ஆயுளை நீடிப்பதற்கு எதிராகவும் வாக்களித்திருந்தனர். பாராளுமன்ற ஆயுள் நீட்டிப்பு தமக்கும் பலன்தரும் என்பதால் தமிழர் விடுதலைக் கூட்டணி அமைதி காத்தது. ஆனால், இதற்கெதிராக யாழ்ப்பாணத்தின் இரண்டு பத்திரிகைகள் (ஈழநாடு, சற்றடேறிவ்யூ) காத்திரமான பங்களிப்பைச் செய்ததையும் இவ்விடத்து நினைவுகூர வேண்டும். ஜனாதிபதித் தேர்தலில் எந்த தமிழ்த் தேசியவாதியும் எதிர்பாராதளவு வாக்குக்களை ஸ்ரீ.ல.சு.க.வேட்பாளர் ஹெக்ற்றர் கொப்பேகடுவ பெற்றார். சிரிமாவோ பண்டாரநாயக்க ஆட்சியில் விவசாயிகள் அனுபவித்த செல்வச் செழிப்பை ஜயவர்தன ஆட்சியின் திறந்த பொருளாதாரக் கொள்கையின் கீழ் இழந்தமையே அதன் காரணமாகும்.

வன்முறை நிகழ்வுகள் மிகவும் குரூரமாயும் காட்டு மிராண்டித்தனமாயும் அமைந்த போதும் அவற்றில் எதையும் ஜயவர்தன கண்டிக்கவில்லை. மாறாக, அதைச் சிங்கள மக்களின் நியாயமான கோபம் என்று நியாயப்படுத்தினார். அதைத் தொடர்ந்து அவல் தமிழரை அரசியல் ரீதியாகவும் தண்டிக்க முற்பட்டார். அரசியல் யாப்பின் ஆறாவது சட்டத் திருத்தத்தின் மூலம் இலங்கை அரசுக்கும் இலங்கையின் ஒருமைப்பாட்டிற்கும் விசுவாசமாகச் சத்தியப் பிரமாணம் செய்யாத எவரும் அரசாங்கப் பதவியில் இருக்கவோ பாராளுமன்றத்திலே ஊராட்சியிலோ உறுப்புரிமை பெறவோ இயலாமலாக்கப்பட்டது. இதனால் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் தமது பாராளுமன்ற ஆசனங்களை இழந்தனர்.

1983 வன்முறையானது உலகளாவிய கவனம் பெற்ற ஒன்றாக மாறியது. ஊடகத் தணிக்கை நடைமுறைப்படுத்தப்பட்ட போதும், சம்பவ காலத்தின்போது இலங்கையிலிருந்த சுற்றுலாப் பயணிகள் கண்டதுடன் காணொளிகளாகப் பதிவு செய்ததால் மேற்குலக ஊடகங்களில் அதன் அருவருக்கத்தக்க உண்மைகள் வெளியாயின.

1983 இன வன்முறைகள் இலங்கையின் மொத்த எதிர்காலத்தையே மாற்றியது. 26 ஆண்டுகள் நீடித்த ஒரு உள்நாட்டுப் போருக்கு வழிவகுத்தது. அத்தோடு, அனைத்து வழிகளிலும் இலங்கையின் எதிர்காலத்தைக் குழிதோண்டிப் புதைத்தது.

## கடிதங்கள்

### முதலைகளின் நடமாட்டம் அதிகரிப்பு

அம்பாறை மாவட்டத்தில் சிறுபோக வேளாண்மை செய்கை ஆரம்பமாகியுள்ள நிலையில், அதிகளவிலான முதலைகள் வெளியேறி மக்கள் குடியிருப்புகளுக்குள் செல்கின்றன.

மாவடிப்பள்ளி பாலம் சம்மாந்துறை பகுதி, ஒலுவில் பகுதி, நிந்தவூர், மருதமுனை, பெரியநீலாவணை, நற்பிட்டிமுனை, பாண்டிருப்பு, கிட்டங்கி, நாவிதன்வெளி உள்ளிட்ட பகுதிகளை அண்மித்த ஆற்றை விட்டு இரவிலும் பகலிலும் முதலைகள் வெளியேறுவதனால் வீதியால் செல்லும் பயணிகள் மற்றும் பாதசாரிகள் அச்சத்துடனேயே பயணத்தை மேற்கொள்கின்றனர்.

மேலும், இம்மாவட்டத்தில் உள்ளிட்ட களப்புக்கள் போன்ற இடங்களிலும் முதலை அச்சுறுத்தல் தொடர்ந்து வருகின்றன. மேற்படி, பகுதிகளிலுள்ள வாவிகள் குளங்களிலும் முதலைகளின் பெருக்கம் அதிகரித்துக் காணப்படுகிறது. குறிப்பாக இரவு நேரங்களில் அதிகமான சுமார் 9, 5, 4 அடி நீளமுடைய முதலைகள் வெளியேறுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

நீருக்காகக் குளங்களை நாடிச் செல்லும் ஆடு, மாடுகள் உள்ளிட்ட கால்நடைகள் முதலைகளினால் இரைக்குள்ளாகின்றது.

முதலைகளின் பெருக்கம் சம்பந்தமாக உரிய இடங்களில் அறிவுறுத்துதல்கள், எச்சரிக்கை பலகைகள் உரிய இடங்களில் இதுவரையும் வைக்கப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. முதலை அபாயம் தெரியாமல் இப்பகுதியில் பயணிப்பதால் முதலையின் பிடிக்குள் அகப்படும் சாத்தியம் உள்ளது. இதை உரிய அதிகாரிகள் கவனத்தில் எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுகின்றனர்.

– பாறுக் ஷிஹான்



அநுராதபுர நெல் விவசாயிகளுக்கு

# ட்ரோன் குறித்த விழிப்புணர்வு

இலங்கையின் மகாவலி அதிகார சபையுடன் இணைந்து கொமர்ஷல் வங்கி ஏற்பாடு செய்த விழிப்புணர்வு நிகழ்வின் போது, இலங்கையின் வடமத்திய மாகாண விவசாயிகளுக்கு விவசாய நடைமுறைகளை நவீனமயமாக்குவதில் டிரோன்களின் பங்களிப்பு தொடர்பான விளக்கங்கள் வழங்கப்பட்டிருந்தன.

அநுராதபுரம் மாவட்டத்தில் தம்புத்தேகம பிரதேசத்தில் உள்ள 100க்கும் மேற்பட்ட விவசாயிகள் மற்றும் சில மாணவர்களுக்கும் நெற்பயிர்களை விதைப்பதற்கும் உரம் மற்றும் விவசாய இரசாயனங்களைப் பயன்படுத்துவதற்கும் ட்ரோன்களை எவ்வாறு பயன்படுத்துவது என்பது குறித்து நிபுணர்களால் விளக்கமளிக்கப்பட்டது.

இந்த விலைமதிப்பற்ற அறிவுசார் நேரடி செயல்விளக்கங்கள், இலங்கை மகாவலி அதிகாரசபையின் பிரதிநிதிகள் மற்றும் ட்ரோன் தீர்வுகளை வழங்கும் நிறுவனமான ஏரோஜெனி ட்ரோன் சேர்வீசஸ் பிரதிநிதிகளினால் இத்திட்டத்துக்கு மூலகாரணியாக அமைந்த வங்கியின் அபிவிருத்தி கடன் திணைக்கள அதிகாரிகளின் ஆதரவுடன் நடத்தப்பட்டுள்ளது.

உணவுப் பயிர்கள் விளைவித்தல், அறுவடை செய்தல் மற்றும் பதப்படுத்துதல் போன்றவற்றில் புரட்சியை ஏற்படுத்தும் பொருத்தமான தொழில்நுட்ப முன்னேற்றங்களைப் பின்பற்றுவதன் மூலம் இலங்கையின் விவசாயம் நவீன யுகத்திற்கு மாற வேண்டும்' என கொமர்ஷல் வங்கியின் தனிப்பட்ட வங்கியியல் பிரதிப் பொது முகாமையாளர் திரு டிலக்ஷன் ஹெட்டியாராச்சி தெரிவித்தார். நாட்டின் விவசாயத் துறைக்கு மிகப்பெரிய கடன் வழங்குபவர்களில் ஒருவராக, கொமர்ஷல் வங்கி இந்த மாற்றத்திற்கான ஊக்கியாக விளங்குகிறது, மேலும் இதற்காக நிதி, நேரம் மற்றும் நிபுணத்துவம் ஆகியவற்றை முதலீடு செய்வதற்கு நாங்கள் கடமைப்பட்டுள்ளோம்.'

தொழிலாளர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு மேலதிகமாக .ட்ரோன்கள் மற்றும் பிற கண்டுபிடிப்புகளின் பயன்பாடு எவ்வாறு அதிக செலவு குறைந்ததாகவும் நேரத்தை மீதப்படுத்துவதாகவும் உள்ளது என்பதை விவசாயிகளுக்கு கற்றுத்தருவதன் மூலம் நெல் விவசாயம் மற்றும் இதர பயிர்ச்செய்கை நடவடிக்கைகளில் நவீன தொழில்நுட்பத்தை பின்பற்றுவதை ஊக்குவிப்பதே இந்த திட்டத்தின் நோக்கமாகும் என்று வங்கி தெரிவித்துள்ளது.

கொமர்ஷல் வங்கியின் விவசாய நவீனமயமாக்கல் வேலைத்திட்டத்தின் கீழ் நாட்டின் ஏனைய விவசாயப் பகுதிகளிலும் இது போன்ற விழிப்புணர்வு அமர்வுகளை நடத்த திட்டமிட்டுள்ளதாக வங்கி தெரிவித்துள்ளது.

## Rainbow Pages சம்பியன்ஸ் லீக்

கூட்டாண்மை நிறுவனங்களுக்கான அணிக்கு அறுவர் கொண்ட மென்பந்து கிரிக்கட் போட்டித் தொடர் அண்மையில் பத்தரமுல்ல ஜி.எச். புத்ததாச மைதானத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதில் நாட்டின் முன்னணி நிறுவனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி 28 அணிகள் பங்கேற்றிருந்தன. இந்த போட்டித் தொடரை Rainbow Pages நலன்புரிச் சங்கம் ஏற்பாடு செய்திருந்தது. SLT-MOBITEL குழுமத்தினால் இலங்கையின் தேசிய வியாபார தொலைபேசி விவரக் கோவையான Rainbow Pages நிர்வகிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்தப் போட்டித் தொடரின் அரையிறுதிப் போட்டியின் வெற்றியாளர்களாக Winners Global, Sonasu Connect, GM Garments மற்றும் Salota International ஆகியன தெரிவு செய்யப்பட்டிருந்தன. சம்பியன்ஷிப் பட்டத்தை Winners Global பெற்றுக் கொண்டதுடன், GM Garments மற்றும் Salota International ஆகியன இணைந்த இரண்டாமிடங்களுக்காக அறிவிக்கப்பட்டிருந்தன.

Winners Global (Pvt) Ltd இன் கிரிக்கட் அணி சம்பியன்ஸ் கிண்ணத்தை சுவீகரித்ததுடன், ரூ. 200,000 பணப் பரிசையும் பெற்றுக் கொண்டது. வெற்றியாளர்களுக்கு வெற்றிக் கிண்ணங்களை பரிசளிக்கும் நிகழ்வில், பொரளை The Chance Sports இன் முகாமைத்துவ பணிப்பாளர் லசந்த அமரசிங்க, நுகேகொட AD Sports இன் முகாமைத்துவ பணிப்பாளர்களான ஆனந்த மற்றும் திருமதி. வசந்தி, SLT (Services) Limited இன் பிரதம அதிகாரி (டிஜிட்டல் சேவைகள்) உபுல் மஞ்சநாயக்க மற்றும் பிரதம செயற்பாட்டு அதிகாரி அசேல கலப்பத்திகே ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.




**“ சம்பியன்ஷிப் பட்டத்தை Winners Global பெற்றுக் கொண்டதுடன், GM Garments மற்றும் Salota International ஆகியன இணைந்த இரண்டாம் ங்களுக்காக அறிவிக்கப்பட்டிருந்தன**

## தாழ் திறவாய்

கதவு மறுக்கப்படும்
ஒவ்வொரு தடவையும்
சாளரங்களை திறக்கும்
மாயத்தை செய்திருக்கிறேன்...

இது ஒரு மாயவிளையாட்டு
இதன் பெயர் ‘மாற்று வழி’

அவள் என் மனதை
சன்னல் என நினைத்திருக்கலாம்
தன்னை ஒரு பறவையாகவும்
எண்ணியிருக்கலாம்...


அவள் என்னிடம் வருகையில்
நான் கதவுகளை மறுத்தேன்
விளையாட்டாக.
விதிகளின் பிரகாரம் உருவான
சாளரத்தினூடே அவள்
வந்தாள்...

ஆனால் அவள் நினைத்திருந்த
சன்னல் எனது சாளரமல்ல
வெளியேற நினைக்கையில்
அவளின் சன்னலும்
எனதுசாளரமும்
மோதிக்கொண்டன...

தவிர்கவே முடியாமல்
கதவுகளூடே வெளியேறினாள்
ஆனால் பறவையாகவல்ல...

- லலித்தா -





## கவி பாடி வா....!

கடலுக்குள் விளைகின்ற
முத்தாக வா..., என்றும்
கண்ணுக்குள் ஒளிர்கின்ற
மணியாகவா..., அலையும்
படகுக்கு நீயொரு
துடுப்பாகவா..., ஒரு
பண்பட்ட சமுதாய
வழிகாட்டியாய் வா...!

உழைப்போர்க்கு நல்லதோர்
தோழனாய் வா, அண்டிப்
பிழைப்போரை எரிக்கின்ற
பெருந் தீயாய் வா...!

மலருக்குள் சுரக்கின்ற
தேனாகவா, நல்
மனங்கொண்டு உயர்ந்ததோர்
மனிதனாய் வா...!
பாட்டுக்குள் பொதிந்ததோர்
பொருளாகவா
பலர் கேட்டு (இ)ரசிக்கின்ற
இசையாகவா...!

வீட்டுக்குஒளிதரும்
சுடராகவா, புது
விடியலில் எழுகின்ற
கதிராக வா...!
எனக்காக என்பதைப்
புறந்தள்ளி வா..., யாவும்
எமக்காக என்றதோர்
எண்ணத்தில் வா...!
சமநீதி தழைத்தோங்க
கை கோர்த்து வா..., புதிய
சகாப்தமும் மலர்ந்திட
கவி பாடிவா...!

- ஷெல்லிதாசன்-



## தமிழர் பண்பாடு

உயர் பண்பாடு என்றாலே
தமிழர் தான் என்பது தரணியின் விதி
பயிர் பண்பாய் உழுது உலகப் பசியாற்றவும்
பொங்கல் படைத்துப் பகலவனுக்கு
நன்றியுரைத்தும்...

பட்டிப் பொங்கலிட்டு தன்னுடன்
உழைக்கும் காளைக்கும் நன்றி நவில்ந்து
விருந்தோம்பல் என்றுயர் பண்புகொண்டு
வந்தோரை வரவேற்றுத்
தலைவாழையிலை போட்டு
கேட்டுக் கேட்டு அலுக்கும் வரையில்
பாட்டாகும் வினாக்கள்
கொஞ்சச் சோறுவைக்கவோ?
கொஞ்சக் கறிவைக்கவோ?
மனமாச் சாப்பிடுங்கோ...
என்று அன்பைப் பகிர்ந்தும்
சடங்குகள் கொண்டு மெய்ஞானத்தால்
விஞ்ஞானமும் அறிவியலின் ஆணிவேராய்
விஞ்சிடும் அழகானவிந்தைகள் அதனுள்
குழந்தை பிறந்திடத் தாலாட்டாய்
அறிவுரைகள்...

முதல் மாதம் தாய்மாமன்
மடியமர்த்தி காதுகுத்தி
பருவமங்கையாக சடங்கும் செய்து
திருமண வயதடைய கல்யாண வைபோகமும்
வாழ்வு முடிய ஒப்பாரி முதற் கொண்டு
சாந்திக் கிரியைகளும்
பண்பாட்டைக் கூறும்
பட்டுப்புடவையும் மாறுகரை
வேட்டியும் ...

கட்டினால் போதும் ஊர்க் கண்ணே
வியந்துநிற்கும்
பழைய கஞ்சியும் பக்குவமாய்
அரைத்தகறியும்
அழியாத சுவையாய் நாவில் நிலைத்திட
உறவுகள் கூடி வாழும்
அழகியவாழ்வும் அழியாத
பண்பாடும் தமிழர் நமதே...

- குகதா -
(கி.டக்ஸனா)


## என் திசை



இன்னும் விரைவாய் பயணி என
கட்டளையிடுகிறது வாழ்த்துக்கள்...
இன்னும் சரியாய் பயணி என
சத்தமிடுகிறது தூற்றல்கள்...
இவையிரண்டுக்குமிடையில்...
நான் ஒரு பாதசாரியாய்
பிராணாயாமம் பழகுகிறேன்...

எதிர்பார்ப்பற்ற உதவிகள்
அனைத்தும் முடிந்தபின்
கைகள் கழுவப்படுகின்றன.
இப்போது மெல்லமெல்ல
சுவாசத்தின் சுவைபிடிக்கிறேன்.


ஓர் இயலாமை நிறைந்த
கண்களுக்குள் ஒரு புதிய
மீனைஅறுத்து கறிசமைத்த
கைகளை சுத்தப்படுத்துவதாகவே
மாயத் தோற்றம் எழுகிறது.
பயிற்சியினை பழக்கப்படுதிக்கொண்டு
பிரம்மமுகூர்த்தத்தினை
இப்போதுதான் மோகிக்கிறேன்...



விடிந்தும் விடியாததுமான
அந்த ஆனந்த பொழுதில்
வைகறை சூரியனைத்
தொட்டு நெற்றிப் பொட்டிடுகிறேன்...

நானும் வருகிறேன் என
அவன் கையைப் பற்றிக்கொண்டு
பிடிவாதச் சிணுங்கல் செய்கையில்
மழலையாய் தான் நானும் தெரிகிறேன்...

- வசுமதி நிர்மல் -















### கிழக்கில் களைகட்டும்

# கண்ணகை அம்மன் சடங்கு...

**விபுலமாமணி வி.ரி.சகாதேவராஜா**

வைகாசி பிறந்து விட்டால் கிழக்கின் பட்டிதொட்டியெல்லாம் பறையொலி முழங்க குழல்நய ஓசையெழுப்ப வைகாசிப் பொங்கல் நடைபெறுவது வழமை. கிழக்கில் பெரும்பாலான தமிழ்க்கிராமங்கள் பாரம்பரிய இச்சடங்கினால் களைக்கட்டும்.

கிழக்கில் பெரும்பாலான கண்ணகி ஆலயங்களில் எதிர்வரும் 13ஆம் திகதி திங்கட்கிழமை இச் சடங்கு ஆரம்பமாகிறது. வடக்கில் வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலயத்திலும் இச்சடங்கு சிறப்பாகப் பாக்கு தெண்டலுடன் ஆரம்பமாகியிருக்கிறது.

பூம்புகாரைத் தலைநகராகக்கொண்டு சோழ நாட்டிலே பிறந்து பாண்டியநாட்டிலே அரசியல் புரட்சி செய்து சேரநாட்டிலே தெய்வமாகிய கண்ணகை அம்பாள், சிங்கள மக்கள் மத்தியில் பத்தினித்தெய்யோ என இன்றும் வழிபட்டு வருவதைக் காணலாம்.

கண்ணகி வணக்கம் இலங்கையின் இரண்டு இனத்தாரிடையே (தமிழர், சிங்களவர்) வளர்க்கப்பட்டு வந்தது. கண்ணகை அம்மன் என்றும் பத்தினி தெய்யோ என்றும் வழங்கப்பட்டு வந்தது.

கண்ணகி தமிழரிடையே ஒரு புதுத்தெய்வமாக உருப்பெற்ற கதையைச் சிலப்பதிகாரம் சுவை படக்கூறுகிறது.

வானோர் வடிவில் வந்த கோவலனோடு தெய்வ விமானமேறி கண்ணகி வானகம் சென்ற காட்சியைக் கண்ட வேடுவர்கள் அவளைத் தெய்வமாகப் போற்றினார்கள்.

சிறு குடியீரே சிறு குடியீரே ...என்ற சிலப்பதிகார குன்றக்குரவைப் பாடலைப் பாடி வேங்கை மரத்தின் கீழ் எடுத்த முதற் சடங்கு கண்ணகி சடங்காகும்.அதனையொட்டி கண்ணகி சடங்கு முறை வழக்கிற்கு வந்தது.

சேரன் செங்கூட்டுவன் இமயத்திலிருந்து கல்லெடுத்துவந்து கங்கையில் நீராட்டி அக்கல்லிலிருந்து கண்ணகியின் சிலை வடித்து தனது தலைநகராம் வஞ்சி மாநகரில் அமைத்த ஆலயத்தில் பிரதிஷ்டை செய்தான். அங்கு இந்திர விழா எடுத்தான்.

இந்த விழாவிற்கு குடகக்கொங்கரும் மாளுவவேந்தனும் கடல் சூழிலங்கை கயவாகு வேந்தனும் வந்திருந்ததாகச் சிலப்பதிகாரம் கூறிநிற்கிறது.
இச் சிலப்பதிகாரத்தையும் பழைய ஏடுகளையும் வைத்து கிழக்கில் பல காப்பியங்களும் நூல்களும் வெளிவந்தன.

கண்டி அரசன் இரண்டாம் இராசசிங்கன் காலத்தில் (1629-1637) பாடப்பெற்ற தம்பிலுவில் கண்ணகை அம்மன் ஊர்சுற்றுக் காவியத்தில் மட்டக்களப்புப் பிராந்தியத்தில் 30 கண்ணகை அம்மன் ஆலயங்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டிருந்தன. அவற்றில் அங்கணாமைக்கடவை (வெளியிலிருந்தும்) முதலூராகக் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, அதுவே முதல் ஆலயமாகக் கொள்ளலாம்.

“பட்டி நகர் தம்பிலுவில் வீரமுனை காரைநகர் பவுசுபெறு கல்முனை கல்லாறெருவில் மகிளூர் செட்டிபாளையம் புதுக்குடியிருப்பு செல்வமுறு மகிழடித்தீவு முதலைக்குடா அட்ட திக்கும் புகழும் வந்தாறுமூலை நகர் மட்டவிழ் பூங்குழல் மண்முனைக் கண்ணகையை மனதில் நினைக்க வினை மாறி ஓடிடுமே” என ஊர்சுற்றுக் காவியம் கூறுகிறது.





















# புத்தளத்தில் பாரம்பரிய விளையாட்டு விழா

**எம்.யூ.எம்.சனூன்**

புத்தளம் - ஸாஹிரா தேசிய கல்லூரி மைதான மின்னொளியில் சிறுவர்கள் இளையவர்களின் குதூகலத்தோடு பாரம்பரிய விளையாட்டு விழா கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது.


கயிறு இழுத்தல், டயர் உருட்டுதல், ஆள் தூக்கி ஓடுதல், சாக்கோட்டம், போன்ற பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகளும் சிறுவர்களுக்கான ஓட்டப்போட்டிகள், கதிரை சுற்றுதல், தொப்பி மாற்றுதல், வினோத உடை போட்டிகளும் நடைபெற்றன.

பிரதான அனுசரணையாளர் ஏ.எம்.மஜாஸ், அமேசன் கெம்பஸ் பணிப்பாளர் இல்ஹாம் மரிக்கார், ஜெயா பார்ம் பர்வீன் ராஜா ஆகியோர் திகழ்ந்தனர்.

புத்தளம் நகர வர்த்தகர்களின் பணப் பரிசில்கள், பரிசு பொதிகள் மற்றும் தங்க ஆபரணங்கள் என்பன விழாவுக்கு மெருகூட்டியன.

புத்தளம் சமூகத்தில் அன்று தொட்டுப் பேணப்பட்டு வரும் கலை, கலாசார மற்றும் பாரம்பரிய மரபுகளைப் பாதுகாத்து அடுத்த தலைமுறைக்கும் கையளிக்கும் பணிகளை மூத்த இளைய சமூக ஆர்வலர்கள் இணைந்து முன்னெடுத்த இந்த முயற்சி வெற்றி பெற்றுள்ளது.














# ஜனாதிபதி உரையின் சாரம்சம்

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை(09) விசேட உரையாற்றினார். அந்த உரையின் சாரம்சம்

## நம்பிக்கை இருந்தது

முறையான திட்டம், அனுபவம் மற்றும் சர்வதேச தொடர்புகள் என்பவற்றின் காரணமாகவே தனியொரு பாராளுமன்ற உறுப்பினராக இருந்த போதும் எவ்வித நிபந்தனைகளும் இன்றி நாட்டைப் பொறுப்பேற்றதாகவும் அதன் ஊடாக நரகத்தில் விழுந்த நாட்டை மீட்க முடியும் என்ற நம்பிக்கை தனக்கு இருந்தது.

## பயணம் ஆரம்பமானது

வீழ்ச்சியடைந்த நாட்டை மீளக் கட்டியெழுப்பப் பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் மீட்சித் திட்டங்கள் முறையாக நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளதாகவும் அதன் விளைவாக 2023ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் இருந்து பொருளாதார முன்னேற்றத்திற்கான பயணம் ஆரம்பமாகியுள்ளது.

## 3 சதவீதமாக இருக்கும்

இந்த ஆண்டு பொருளாதார வளர்ச்சி சுமார் மூன்று சதவீதமாக இருக்கும் என்று எதிர்பார்ப்பதாகக் குறிப்பிட்ட ஜனாதிபதி, பல்வேறு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதி நிறுவனங்களும் இதற்கு நிகரான எதிர்வு கூறல்களை முன்வைத்துள்ளேன்.

## வட்டி விகிதம் வீழ்ச்சி

தற்போது, நாட்டின் பணவீக்கம் 1.5% வரை வீழ்ச்சியடைந்துள்ளதோடு, பல ஆண்டுகளாகப் பற்றாக்குறையில் இருந்த முதன்மைக் கணக்கின் இருப்பு, 2023ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 0.6 சதவீத உபரியாக மாற்ற முடிந்தது. பல தசாப்தங்களுக்குப் பின்னர், 2023ஆம் ஆண்டில் கொடுப்பனவுகளின் நடப்புக் கணக்கு உபரியாக உள்ளது. வட்டி விகிதம் 10% - 13% வரை வீழ்ச்சியடைந்துள்ளது என்றார்.

## விசேட பிரிவு ஸ்தாபிக்கப்படும்

பொருளாதார நெருக்கடியின் மத்தியில், சிறு மற்றும் நடுத்தர தொழில்முனைவோரை மீட்கும் திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் அதற்காக பாரிய முதலீடு மேற்கொள்ள அரசாங்கம் ஏற்கனவே நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் குறிப்பிட்ட ஜனாதிபதி, அந்தப் பணிகளை ஒருங்கிணைக்க திறைசேரியில் சிறு மற்றும் நடுத்தர தொழில்முனைவோர் தொடர்பான விசேட பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

## அடைய முடிந்தது

2024ஆம் ஆண்டின் முதல் மூன்று மாதங்களில் டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதியை 300 ரூபாவை விட குறைக்க முடிந்ததோடு, அந்நிய செலாவணி கையிருப்பு 5 பில்லியன் டொலர்களுக்கு மேல் உயர்த்தப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, சவாலான, கடினமான ஆனால், சரியான பாதையில் பயணிப்பதால் இந்த நிலையை அடைய முடிந்ததாகக் குறிப்பிட்டார்.

## இறுதி இலக்கு

2032ஆம் ஆண்டளவில் இலங்கையின் மொத்தக் கடன் தொகையை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 95 வீதமாகக் குறைத்து, அரசாங்கத்தின் மொத்த நிதித் தேவையை வருடாந்தம் 13 வீதமாகக் கொண்டு வருவதும், வெளிநாட்டுக் கடன் சேவையை வருடாந்தம் 4.5 வீத்தை விட அதிகரிக்காமல் இருப்பதை உறுதி செய்வதும் கடன் மறுசீரமைப்பின் இறுதி இலக்கு என்றார்.

## ஊழலுக்கு எதிரான வேலைத் திட்டம்

கடன் நிலைத்தன்மையை உறுதி செய்யாமல் நாட்டின் பொருளாதாரத்தை நீண்ட கால அடிப்படையில் முன்னெடுத்துச் செல்வது சாத்தியமில்லை என சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, IMF இன் உதவியுடன் முன்னெடுக்கப்பட்ட அரசாங்க சோதனை அறிக்கையின் (Governance Diagnostic Report) அடிப்படையில் ஊழலுக்கு எதிரான வேலைத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்த தற்போது நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

## சமர்ப்பிக்க எதிர்பார்ப்பு

நாட்டில் பொருளாதார மறுசீரமைப்புகளை நோக்கமாகக் கொண்டு, கடந்த இரண்டு ஆண்டுகளில் 30இற்கும் மேற்பட்ட புதிய சட்டங்கள் மற்றும் சட்டத் திருத்தங்கள் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளதாகவும் விரைவில் இதேபோன்ற பல சட்டங்களுடன், பொருளாதார மாற்ற சட்டமூலம் (Economic Transformation Bill), அரச நிதிச் சட்டமூலம் (Public Finance Bill) மற்றும் அரச கடன் முகாமைத்துவச் சட்டமூலம் (Public Debt Management Bill) என்பவற்றைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க குறிப்பிட்டார்.



## கொடுப்பனவு அதிகரிப்பு

பொருளாதார மறுமலர்ச்சி வேலைத் திட்டத்தின் பெறுபேறுகள் மூலம் மக்களுக்கு நிவாரணம் வழங்கக் கடந்த இரண்டு வருட காலத்தில் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவித்த ஜனாதிபதி, 'அஸ்வெசும' திட்டம் மற்றும் நிவாரணத் திட்டங்களின் கீழ், நாட்டின் வறிய மக்களுக்குப் பெருமளவிலான பணத்தை நேரடியாக வழங்குவதாகவும், சிறுநீரக நோயாளிகள், முதியோர் மற்றும் ஊனமுற்றோருக்கான கொடுப்பனவு 2024 ஏப்ரல் முதல் 50 சதவீதத்தினால் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

## நிவாரணம் அதிகரிப்பு

சமுர்த்தி நிவாரணத்தை விட, மூன்று மடங்கிற்கும் அதிகமான தொகை வறிய மக்களுக்கு வழங்கப்படுவதாகவும், 2024ஆம் ஆண்டில் இந்த நிவாரணத் திட்டங்களுக்காக 205 பில்லியன் ரூபாய் செலவிடப்படும் என்றும் இதற்கு முன்னர் இந்தளவு பாரிய தொகை வறிய மக்களுக்காக ஒதுக்கப்படவில்லை எனவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

## விலைகள் குறைந்துள்ளன

ரூபாய் வலுப்பெற்றதால் இறக்குமதி செய்யப்படும் பொருட்களின் விலைகள் கணிசமாக குறைந்துள்ளதாக சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, இதற்கமைய எரிவாயு, எரிபொருள், பால் மா ஆகியவற்றின் விலைகள் குறைந்துள்ளதாகவும் வட்டி வீதம் குறைந்தமையால் தொழில் முனைவோருக்கு அதிக வசதி, வாய்ப்புகள் கிடைத்துள்ளதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

## விவசாயிகளை தடுக்க முடியாது

1930இற்குப் பிறகு, சுமார் 20 இலட்சம் விவசாயக் குடும்பங்களுக்கு காணி உரிமைகளை வழங்கும் 'உறுமய' திட்டம் மிகவும் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் இதன் ஊடாக முழுமையான காணி உறுதி அவர்களுக்குக் கிடைக்கும் எனவும் இந்த வேலைத் திட்டத்தால், இலங்கை முழுவதிலும் ஆயிரக்கணக்கான விவசாய வர்த்தகர்கள் உருவாவதைத் தடுக்க முடியாது என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

அத்துடன், விவசாய உற்பத்தித்திறன் மேம்பாட்டின் அடிப்படையில் விவசாய நவீனமயமாக்கல் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் நவீன தொழில்நுட்பத்தின் அடிப்படையில் விவசாயிகளை வலுப்படுத்துவது இந்தத் திட்டத்தின் நோக்கங்களில் ஒன்று எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

## சட்டத்தை முன்னெடுக்கவும்

பாராளுமன்றத்தில் விரைவில் சமர்ப்பிக்கப்படவுள்ள பொருளாதார மாற்றச் சட்டத்தில் அரசாங்கம் நீண்டகாலத்திற்குக் கடைப்பிடிக்க வேண்டிய பல நடவடிக்கைகள் உள்ளடக்கப்படும் என்றும் எதிர்காலத்தில் எந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தாலும் பொருளாதாரத்தை மீண்டும் அதலபாதாளத்தில் தள்ளாமல் சட்டத்திலுள்ள விடயங்களைத் தொடர்ச்சியாக முன்னெடுக்க வேண்டும் என்றார்.

# காஸா எல்லையில் பெரிய பூட்டு

இஸ்ரேல் - ஹமாஸ் இடையிலான போரில் கடைசி நம்பிக்கையாக திகழ்ந்த ரஃபா நகரை குறிவைத்து இராணுவத்தை இறக்கி விட்டுள்ளனர். இதனால் பாலஸ்தீனிய மக்கள் பெரிதும் அதிர்ச்சி அடைந்துள்ளனர். அடுத்து என்ன நடக்குமோ? என்ற பதற்றம் தொற்றிக் கொண்டது.

மத்திய கிழக்கு நாடுகளில் போர் பதற்றம் தொடர் கதையாகி மாறியுள்ளது. இஸ்ரேல் - ஹமாஸ் இடையிலான சண்டை 214ஆவது நாளை எட்டியுள்ளது. காஸா பகுதி முற்றிலும் உருக்குலைந்து கிடக்கிறது. இங்கிருந்து பல இலட்சம் பேர் ரஃபா நகரில் தஞ்சமடைந்துள்ளனர். இந்நிலையில் ரஃபாவில் ஹமாஸ் படைகளின் முகாம்கள் இருப்பதாக கூறி, அவற்றின் மீது தாக்குதல் நடத்த இஸ்ரேல் முடிவு செய்துள்ளது.



இது அப்பாவி மக்கள் மீது திரும்ப வாய்ப்பிருப்பதாக கூறியும் கேட்கவில்லை.

தற்போது கான் யூனிஸ் நகருக்கு ரஃபாவில் உள்ள மக்களை இடமாற்றம் செய்ய இஸ்ரேல் திட்டமிட்டு, அதற்கான வேலைகளை முடுக்கி விட்டுள்ளது.

பாலஸ்தீனிய மக்களை இடமாற்றம் செய்ய பிற நாடுகளின் உதவியை இஸ்ரேல் நாடியிருக்கிறது. ரஃபாவில் தன்னுடைய ஆபரேஷன் தொடங்கிவிட்டதை உணர்த்தும் விதமாக இராணுவ டாங்கிகளை உள்ளே கொண்டு சென்றுள்ளது.

மேலும், எகிப்து நாட்டை ஒட்டி காணப்படும் காஸா எல்லைப் பகுதியை தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்துள்ளனர்.


ஜப்பான்

பற்களைத் திருடி விற்று

## கோடீஸ்வரரான மருத்துவர்

10 ஆண்டுகளாக பற்களை திருடி விற்று கோடீஸ்வரரான ஜப்பான் மருத்துவர் ஒருவர் பொலிஸாரிடம் சிக்கியுள்ளார்.

அங்குள்ள கியு மருத்துவக் கல்லூரியில் பல் மருத்துவராக பணியாற்றி வந்த குறித்த மருத்துவர், மருத்துவமனையில் சேர்த்து வைக்கப்பட்டிருந்த பழைய பற்களை எடுத்து விற்பனை செய்து வந்துள்ளார்.

நோயாளிகளிடம் இருந்து எடுக்கப்பட்டு அறையினுள் மறு சுழற்சிக்காக பத்திரப்படுத்தி வைக்கப்பட்டிருந்த செயற்கை பற்களை 10 ஆண்டுகளாக யாருக்கும் தெரியாமல் விற்பனை செய்து கோடிகளில் சம்பாதித்துள்ளார்.

இந்நிலையில், மருத்துவமனையில் அடிக்கடி பற்கள் காணாமல் போவதை அறிந்த நிர்வாகம், இது தொடர்பாக ஆய்வு செய்த போது, மருத்துவரின் திருட்டு அம்பலமானது.

இதைத்தொடர்ந்து மருத்துவமனை நிர்வாகம் அளித்த முறைபாட்டை அடுத்து மருத்துவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

## "இந்தியத் தேர்தலில் தலையிட அமெரிக்கா முயற்சி"

### ரஷ்யா குற்றச்சாட்டு

இந்திய மக்களவைத் தேர்தலில் அமெரிக்கா தலையிட முயற்சி செய்வதாக ரஷ்யா பகிரங்க குற்றச்சாட்டை முன்வைத்துள்ளது. உள்நாட்டு அளவில் நிலவும் அரசியல் சமநிலையை சீர்குலைக்க அமெரிக்கா முயற்சிப்பதாகவும் ரஷ்யா தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் ரஷ்ய வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் மரியா ஜாகரோவா செய்தியாளர் கூறியதாவது, "காலிஸ்தான் பிரிவினைவாதி குர்பத்வந்த் சிங் பன்னுன் கொலை சதியில் இந்தியர்களுக்கு தொடர்பு இருப்பதாக ஆதாரமற்ற குற்றச்சாட்டை அமெரிக்கா சுமத்துகிறது.

இந்திய தேசம் குறித்த புரிதல் மற்றும் அதன் வரலாறு குறித்து அறியாமல் அமெரிக்கா பேசி வருகிறது. இப்படி இந்தியாவின் மத சுதந்திரம் சார்ந்து ஆதாரமற்ற வகையில் அமெரிக்கா தொடர்ந்து பேசி வருகிறது.

இந்தியாவில் நிலவும் அரசியல் சமநிலையை சீர்குலைக்க வேண்டும் என்பதுதான் இதற்கு காரணம்.

இந்திய பொதுத் தேர்தலை சிக்கலாக்கும் நோக்கில் அமெரிக்கா இப்படி செய்கிறது" என்றார்.

சர்வதேச மத சுதந்திரத்துக்கான அமெரிக்க ஆணையம் (USCIRF) இந்தியாவின் மத சுதந்திரம் உட்பட பல்வேறு பிரச்சினைகள் சார்ந்து அண்மையில் குற்றச்சாட்டு வைத்திருந்தது குறிப்பிடத்தக்கது.

மத நம்பிக்கை சார்ந்த உரிமை மீறல்களில் இந்தியா உட்பட 16 நாடுகள் ஈடுபடுவதாக அந்த ஆணையம் குற்றச்சாட்டு வைத்தது. இதற்கு இந்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் வலுவான கண்டனத்தை வெளிப் படுத்தி இருந்தது.



கன்னியாகுமரி

## தனி ஆளாக நின்று சாதித்த மாணவி

தந்தை, தாயின் உதவி இல்லாமல், குடும்ப பொறுப்பை சுமந்தபடியே படித்து 12ஆம் வகுப்பு பொதுப் பரீட்சையில் 4 பாடங்களில் 100 மதிப்பெண்கள் பெற்று அரச பாடசாலை மாணவி ஒருவர் சாதனை படைத்துள்ளார்.

கடந்த 2012ஆம் ஆண்டு நிகழ்ந்த ஒரு விபத்தில் மாணவி கோகிலாவின் தாய், சுய நினைவை இழந்துள்ள நிலையில், அவரது தந்தையின் பராமரிப்பில் வளர்ந்துள்ளார்.

இந்நிலையில், கடந்த 2019ஆம் ஆண்டு தந்தை உடல் நலன் பாதிப்பால் உயிரிழந்ததால், குடும்ப பொறுப்பு அனைத்தும் மாணவி கைகளுக்கு கைமாறியது. மாணவியின் உறவினர் செலவுக்கு உதவி வந்த நிலையில், சுய நினைவை இழந்த தனது தாயை கவனித்தபடி, மாணவி கல்வியிலும் கவனம் செலுத்தி வந்துள்ளார்.

இந்நிலையில், தமிழகத்தில் தற்போது வெளியான 12ஆம் வகுப்பு பொதுப் பரீட்சை முடிவில், மாணவி கோகிலா இயற்பியல், வேதியியல், கணினி அறிவியல், கணிதம் உள்ளிட்ட நான்கு பாடங்களிலும் 100 மதிப்பெண்கள் எடுத்து 600க்கு 573 மதிப்பெண்கள் பெற்று சாதனை படைத்துள்ளார்.

ஆந்திரா

சோதனைச் சாவடியில்

## ரூ.8 கோடி பறிமுதல்; 2 பேர் கைது

இந்திய மக்களவைத் தேர்தல் மாநிலம் முழுவதும் நடைபெற்று வருகின்ற நிலையில், தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமுலுக்கு வந்துள்ளன. இதனால் வாக்காளர்களுக்கு பணம் மற்றும் பரிசுப் பொருட்கள் கொடுப்பதைத் தடுக்கும் வகையில், தேர்தல் பறக்கும் படையினர் தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

அதன் ஒரு பகுதியாக அரசியல் கட்சித் தலைவர்கள், அமைச்சர்கள், முன்னாள் அமைச்சர்கள் மற்றும் வேட்பாளர்களின் வாகனங்களில் பறக்கும் படையினர் தீவிரமாக சோதனை நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில், ஆந்திரப் பிரதேச மாநிலம் என்.டிஆர். மாவட்டத்தில் உள்ள கரிகாபாடு சோதனைச் சாவடியில், என்.டி.ஆர். மாவட்ட பொலிஸார்




சுமார் ரூ.8 கோடி பணத்தை பறிமுதல் செய்துள்ளனர்.

குழாய்கள் ஏற்றிச் சென்ற லொரியில் அமைக்கப்பட்டுள்ள ஒரு தனி இரகசிய அறையில் பணம் கண்டுபிடிக்கப்பட்டு, இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது குறித்து பொலிஸ் ஆய்வாளர் சந்திரசேகர் கூறுகையில், "பறிமுதல் செய்யப்பட்ட இந்தத் தொகையை மாவட்ட தேர்தல் ஆய்வுக் குழுக்களிடம் ஒப்படைப்போம். தேர்தல் ஆணைய அதிகாரிகள் மற்றும் பறக்கும்படை குழுவினர் மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பார்கள்" என்றார்.

ஐ.பி.எல்:

# லக்னோவை துவம்சம் செய்த சண்றைசர்ஸ்

இந்தியன் பிறீமியர் லீக்கில் (ஐ.பி.எல்), ஹைதரபாத்தில் செவ்வாய்க்கிழமை(07) இரவு நடைபெற்ற லக்னோ சுப்பர் ஜையன்ட்ஸ் உடனான போட்டியில் சண்றைசர்ஸ் ஹைதரபாத் அபார வெற்றி பெற்றது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற லக்னோவின் அணித்தலைவர் லோகேஷ் ராகுல் தமதணி முதலில் துடுப்பெடுத்தாடுமென அறிவித்தார்.

அந்தவகையில், முதலில் துடுப்பெடுத்தாடிய லக்னோ ஆரம்பத்திலேயே குயின்டன் டி கொக், மார்க்கஸ் ஸ்டொய்னிஸை புவ்னேஷ்வர் குமாரிடம் இழந்தது. பின்னர் ராகுலை அணித்தலைவர் பற் கமின்ஸிடம் இழந்ததோடு, ரண் அவுட் முறையில் குருனால் பாண்டியாவையும் கமின்ஸிடம் இழந்து தடுமாறியது.

பின்னர் ஜோடி சேர்ந்த நிக்கலஸ் பூரானின் ஆட்டமிழக்காத 48 (26), ஆயுஷ் படோனியின் ஆட்டமிழக்காத 55 (30) ஓட்டங்களோடு 20 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை இழந்து 165 ஓட்டங்களைப் பெற்றது.



பதிலுக்கு 166 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய சண்றைசர்ஸ், அதிரடியான ட்ரெவிஸ் ஹெட்டின் ஆட்டமிழக்காத 89 (30), நடராஜனுக்குப் பதிலாக தாக்கம் செலுத்தும் மாற்றுவீரராகக் களமிறங்கிய அபிஷேக் ஷர்மாவின் ஆட்டமிழக்காத 79 (28) ஓட்டங்களோடு 9.4 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி வெற்றி இலக்கையடைந்தது.

இப்போட்டியின் நாயகனாக ஹெட் தெரிவானார்.

இந்நிலையில், அஹமதாபாத்தில் இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் நடப்புச் சம்பியன்களான சென்னை சுப்பர் கிங்ஸை குஜராத் டைட்டான்ஸ் எதிர்கொள்ளவுள்ளது.



ஐ.பி.எல்:

## மும்பை இந்தியன்ஸ் வெளியேற்றப்பட்டது

இந்தியன் பிறீமியர் லீக்கிலிருந்து (ஐ.பி.எல்.) இவ்வாண்டு வெளியேறும் முதலாவது அணியாக தமது பெயரை ஐந்து தடவைகள் சம்பியனான மும்பை இந்தியன்ஸ் பதிவு செய்தது.

லக்னோ சுப்பர் ஜையன்ட்ஸை புதன்கிழமை(08) சண்றைசர்ஸ் ஹைதரபாத் வென்றதைத் தொடர்ந்தே இது நடந்திருந்தது.

தற்போது 12 போட்டிகளில் விளையாடி எட்டுப் புள்ளிகளுடன் காணப்படும் மும்பை, அடுத்த இரண்டு போட்டிகளில் வென்றாலும் 12 புள்ளிகளையே அடைய முடியும். ஆனால், புள்ளிகள் பட்டியலில் ஐந்தாம், ஆறாமிடங்களில் தற்போதுள்ள டெல்லி கப்பிட்டல்ஸும், லக்னோவும் மோதவேண்டியுள்ள நிலையில், தற்போதுள்ள 12 புள்ளிகளிலிருந்து குறைந்த பட்சம் 13 புள்ளிகளை ஏதாவதொரு அணி பெறும் என்ற நிலையிலேயே மும்பை தற்போது வெளியேற்றப்பட்டுள்ளது.

## ஐ.பி.எல்லில் யாழ். வியாஸ்காந்த்

இந்தியன் பிறீமியர் லீக்கில் (ஐ.பி.எல்) யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சுழற்பந்து வீச்சாளரான விஜயகாந்த் வியாஸ்காந்த் அறிமுகத்தை மேற்கொண்டுள்ளார்.

ஹைதரபாத்தில் புதன்கிழமை (08) இரவு நடைபெற்ற லக்னோ சுப்பர் ஜையன்ட்ஸுக்கெதிரான போட்டியிலேயே சண்றைசர்ஸ் ஹைதரபாத் அணிக்காகவே 22 வயதான வியாஸ்காந்த் அறிமுகத்தை மேற்கொண்டுள்ளார்.

இப்போட்டியில், நான்கு ஓவர்களை வீசிய வியாஸ்காந்த் 27 ஓட்டங்களையே விட்டுக் கொடுத்திருந்தார்.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் பழைய மாணவரான வியாஸ்காந்த், 19 வயதுக்குட்பட்ட இலங்கையணியில் இடம்பெற்றதைத் தொடர்ந்து கவனம் பெற்று பின்னர் லங்கா பிறீமியர் லீக்கில் விளையாடியிருந்தார்.

பின்னர் பங்களாதேஷ் பிறீமியர் லீக்கில் விளையாடியதுடன், ஆசியப் போட்டிகளில் இலங்கைக்கான அறிமுகத்தை மேற்கொண்டதுடன், தொடர்ந்து ஐக்கிய அரபு அமீரக இருபதுக்கு-20 தொடரான ஐ.எல்.டி.20இலும் விளையாடியிருந்தார்.



Masters athletics championship–2024

## ஆசிரியர்கள் இருவர் தங்கம் வென்று சாதனை

■ எஸ்.அஷ்ரப்கான்

மாகாண "மாஸ்டர் அத்லடிக் சம்பியன்ஸிப் - 2024 போட்டிகள்" கண்டி போகம்பர மைதானத்தில் கடந்த 27, 28ஆம் திகதிகளில் நடைபெற்றன.

இப்போட்டியில் கல்முனை அல் - மிஸ்பாஹ் வித்தியாலயத்தின் சிரேஷ்ட உடற்கல்வி ஆசிரியர் றிஸ்மி மஜீத் 100 மீற்றர் ஹேடிஸ் (Hurdies) போட்டியில் கலந்துகொண்டு தங்கப்பதக்கத்தை வென்றார்.

அதேபோல கல்முனை ஸாஹிராக் தேசிய பாடசாலையின் உடற்கல்வி ஆசிரியர் எம்.வை.எம். றகீப் 110 மீற்றர் ஹேடிஸ் (Hurdies) போட்டியில் கலந்துகொண்டு தங்கப்பதக்கத்தை வென்றார்.



இவர்களைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு, கல்முனை வலயக் கல்வி பணிமனையில் வலயக்கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.சஹதுல் நஜிம் தலைமையில் புதன்கிழமை (08) நடைபெற்றது.

இந்த நிகழ்வில், கல்முனை வலய உடற்கல்விப் பணிப்பாளர் எம்.எல்.எம்.முத்தாரிஸ் மற்றும் உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர் ஏ.எம்.அன்சார் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை 10, மே 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.